விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 16 புதன்கிழமை (01.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 13

அனைவருக்கும்




இனிய
புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
- வலம்புரி குடும்பம்

# வடக்கில் பௌத்த சின்னங்களை நிறுவ 500 கோடி ஒதுக்கீடு

## வாய்திறக்காமல் இருக்க தமிழ்த்தலைவர்களுக்கு 300 கோடி
## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

பௌத்த சின்னங்களை வடக்கு, கிழக்கில் நிறுவ சுமார் 500 கோடி ரூபாய் பாதீட்டில் ஒதுக்கிய போது தமிழ்த் தலைவர்கள் அது பற்றிக் கதைக்காமல் இருக்க 300 கோடி கொடுக்கப்போவதாக அப்போதைய பிரதமர் ரணில் அறிவித்திருந்தார் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

விடுமுறையை கழிக்க

## மாலைதீவு பிரதமர் இலங்கை வருகை

(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிஹ். இந்த ஆண்டு இறுதி விடுமுறையை முன்னிட்டு இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

(ம-3)

## வடக்கிற்கு கடத்தப்படவிருந்த 380 கிலோகிராம் கஞ்சா தமிழகத்தில் மீட்பு

### இலங்கை மதிப்பில் 8 கோடிரூபாய் பெறுமதி

(சென்னை)

வடக்கிற்கு கடத்தப்படவிருந்த சுமார் 8 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா தமிழகத்தில் மீட்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் எஸ்.பி.பட்டினம் கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில், மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகள் 380 கிலோகிராம் கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்த நிலையில்,

23

பொன்னாலைச் சந்தியில்

## வீதி புனரமைப்புக்கு சென்ற உழவு இயந்திரம் தடம்புரள்வு

8 பேர் படுகாயம்



23

போர்க்குற்றவாளியாக குற்றம் சுமத்தப்பட்ட

## சவேந்திர சில்வாவிற்கு மேலும் ஒரு இராணுவ பதவி

### ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை

(கொழும்பு)

போர்க்குற்றவாளியாக குற்றம் சுமத்தப்படும் சவேந்திரசில்வா பாதுகாப்பு அதிகாரிகளின் பதில் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவத் தளபதி என்ற அவரது கடமைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி கோட்

23

கிளிநொச்சி மலையாளபுரத்தில்

## வெட்டுக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, மலையாளபுரம் சின்னப்புதுக்குளத்தின் அணைக்கட்டின் கீழ் பகுதியில் பலத்த வெட்டுக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மலையாள புரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின்

23

ராஜித சேனாரத்னவின்

## செயலாளரும் கைதானார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் செயலாளர் எனக் கூறப்படும், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ரூமி மொஹமட் கைது செய்யப்பட்டுள்ளார்.

23

புதிய அரசு அறிமுகப்படுத்திய

## வரிச்சலுகைகள் இன்று முதல் அமுலில்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரிச்சலுகை நிவாரண பொதி இன்று முதல் (01.01.2020) அமுலுக்கு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

23

## சோற்றுப்பானை குழுந்தை மீது வீழ்ந்ததில் 2 வயது பெண் குழந்தை உயிரிழப்பு

### யாழ்.மணியம் தோட்டத்தில் சோகம்

(யாழ்ப்பாணம்)

அடுப்பில் இருந்த சோற்றுப்பானை குழந்தை மீது வீழ்ந்ததில் இரண்டு வயது பெண் குழந்தை பரிதாபமாக நேற்று உயிரிழந்துள்ளது. இந்த சம்பவத்தில் யாழ். மணியம் தோட்டத்தைச் சேர்ந்த யசிந்தன் கஜலக்சி (வயது 2) என்ற குழந்தையே பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

யாழ். மணியம் தோட்டத்தில் வசித்து வரும் குறித்த குழந்தையின் வீட்டில் அவரது தாய்

23

## புலனாய்வாளர் என தெரிவித்து கப்பம் வாங்கியவர் கைது

### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் புலனாய்வாளர் எனக் கூறி கப்பம் வாங்கிய குற்றச்சாட்டில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் தொடர்புடைய மற்றொருவர் யாழ்ப்பாணம் சிறையில் இருப்பதாக காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

23

## 2016இல் தமிழில் தேசியகீதம் அரசியலமைப்பை மீறும் செயல்

### உதய கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 2016ஆம் ஆண்டு சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாடியமை அரசியலமைப்பை மீறும் செயல் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

23

# 5 லீற்றர் கசிப்புடன் தருமபுரத்தில் பெண் கைது

தருமபுரத்தில் 5 லீற்றர் கசிப்புடன் குடுமபப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

நேற்று மாலை 5.00 மணியளவில் கைது செய்யப்பட்ட பெண் பின்னர்பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ம-3,316)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



மண்ணில் 22 - 11 - 1954

விண்ணில் 04 - 12 - 2019

### அமரர் சித்தன்-பரமகுரு

கடந்த 04.12.2019 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் 03.01.2020 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் நிகழ்வு அன்று மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

முரசொலி வீதி,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

பரமகுரு சுபேந்திரன் (மகன்)
077 844 5239 (தொம்மை)
வதன் (மருமகன்) 0770537883

(1648)


கனடாவில்

3 வருட வேலைவாய்ப்புடன் (WORK PERMIT)
நிரந்தர வதிவிட உரிமை (PERMANENT RESIDENCY)



A/L சித்தியடைந்தால் போதுமானது!
தனியாகவோ / குடும்பத்தினருடனோ
கனடாவில் குடியேறும் அரிய வாய்ப்பு! C-8785)

CANADA MIGRATION PILOT
V2 Travels 0768226243

Auto CAD
Personal & Group Classes
பொறியியலாளர்-படவரைஞர்
கட்டிட கலைஞர்-நிலஅளவையாளர்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான
விரைவான சிறப்பு பயிற்சி நெறி
(C-8795)
LINK: 076 9000064 - 071 8617972



KST Tex இன் வாடிக்கையாளர்கட்கு
எமது இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்
திருமண சுபமுகூர்த்த
பட்டுப்புடைவைகள், ஆண்கள்
பெண்களுக்கான அனைத்து வகை
நவீன ஆடைத் தெரிவுகளுக்கும்
நாட வேண்டிய கைராசி ஸ்தாபனம்
KST Tex
KST Tex
127/18, மின்சார நிலைய வீதி,
யூபிலி பஜார், யாழ்ப்பாணம்.
021 222 9470
(C-8774)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எதிர்வரும் தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

New Sun Ceramics (pvt) Ltd
NEW SUN
Elegance quality- Affordable
நத்தார் புதுவருட விசேட விலைக் கழிவு 15%-50%
நிபந்தனைக்கு உட்பட பொருட்கள்
கையிருப்பில் இருக்கும் வரை

கிளிநொச்சியில் நீங்கள் கண்டிராத எண்ணிப் பார்க்க முடியாத புதிய வடிவங்களிலான Floor Tiles Wall Tiles மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியானதும் தரமானதாகவும் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்.



New Sun Ceramics (pvt) Ltd
A-9, Kandy Road , Kilinochchi
(apposite to the old Hospital.
Tel No:- 021 228 3872

நியூ சன் செரமிக் (பிரைவெட்) லிமிமெட்
A-9 கண்டி வீதி, கிளிநொச்சி.
(பழைய மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக)
Tel No:- 021 228 3872

சிறீராம் ஜூவல்லர்ஸ்
பண்டிகையை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான
விலைத் தள்ளுபடி



ஆபரணங்களுக்கான
தரச்சான்றிதழ் வழங்கப்படும்.
இவ் விலைத் தள்ளுபடி
இம் மாதம் மட்டுமே.
(23 தொடக்கம் 31 வரை
மட்டுமே)

ஒரு முறை வந்து பாருங்கள் ஒத்துக் கொள்வீர்கள்!
No:193, 158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 165 1729

# விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

விஸ்டம்

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

எமது கல்லூரியில் தொழில் நுட்பப் பிரிவில் கல்வி கற்று A/L 2019 இல் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3A சி.சிந்துசன் | I Rank 04 வி.இராகவன் | க.சுபாஞ்சன் | செ.ஜிந்துகரன் | எம்.அகக்கீரன் | 3A எ.எம்.மெரீனா | க.திலக்ஷனா | த.லிலானியா |
| ET (New) DR - 01 யாழ் | ET 2AB (Old) DR - 01 யாழ் | ET 2AB (New) DR 01 கிளி | ET 2BS (Old) DR - 01 கிளி | ET 2BC (New) DR 01 முல்லை | ET (New) DR - 01 ஹற்றன் | ET 2BS (Old) DR - 01 முல்லை | BT A2B (New) DR 01 யாழ் |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு.சுவாதி | மு.பா.சப்னா | 3A எஸ்.கஜம்பிரியன் | த.அனோஜன் | வி.நிருபா | ஜெ.லக்சன் | ஜெ.தியாகரன் | 3A எஸ்.வைஷ்ணவன் |
| BT 2BC (Old) DR - 01 கிளி | BT 2AB (Old) DR - 01 திருகோண | ET (New) DR - 02 யாழ் | ET 2BC (New) DR - 02 கிளி | BT 3C (Old) DR - 02 முல்லை | BT 2BC (New) DR - 02 கிளி | BT B2C (Old) DR - 02 மன்னார் | ET (New) DR - 03 யாழ் |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வி.கவுதமி | டிலுக்சன் | மோ.நிருபன் | ஜெ.அனுசியா | சி.ஜீவனா | சு.சுரேந்திரன் | ஜெ.ஜெயக்குமார் |ச.துஸ்யந்தி |
| ET 2BC (New) DR - 03 கிளி | ET B2C (Old) DR - 03 மட்டக்கள | BT 2AB (New) DR - 03 யாழ் | BT B2C (Old) DR - 03 முல்லை | BT 3B (New) DR - 03 கிளி | BT 2BC (Old) DR - 03 யாழ் | ET A2B (New) DR - 04 யாழ் | ET B2C (New) DR - 04 கிளி |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆர்.கபிலன் | ஆ.பகீரதன் | ம.பேபிகீர்த்திகா | ஜெ.ஹெலக்ஷன் | என்.ருஷாந் | என்.சனோஜன் | எ.கம்சிகா | ம.ரிசானா |
| ET BCS (New) DR - 04 முல்லை | ET 2CS (Old) DR - 04 கிளி | BT BCS (Old) DR - 04 கிளி | ET 2AB (New) DR - 05 யாழ் | ET 2BC (New) DR - 05 கிளி | BT 2CS (New) DR - 05 முல்லை | ET BCS (Old) DR - 05 கிளி | BT 3B (Old) DR - 05 திருகோண |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மு.அதிஸ்டகுமார் | கி.சங்கரன் | மொ.பா.அ.அஹமட் | த.டிதுஸ்ஷன் | ச.நிருபிகா | கு.டனுஜன் | ம.தனுஜிகா | அ.சங்கீதா |
| ET B2C (Old) DR - 06 ஹற்றன் | ET 2AB (New) DR - 06 யாழ் | ET 3B (New) DR - 06 திருகோண | ET C2S (Old) DR - 06 வவுனியா | BT 3B (New) DR - 06 யாழ் | ET 2BC (Old) DR - 07 யாழ் | ET 3C (New) DR - 07 கிளி | ET A2C (New) DR - 07 யாழ் |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி.சசிகரன் | எம்.ரி.எம்.பஜாஸ் | க.சரண் | சு.தர்மராஜ் | பா.வியூசனி | சி.கீர்த்தனா | டி.சரோன் கபோனா | எம்.எம்.எ.ரசாக் |
| ET 3B (Old) DR - 08 யாழ் | ET A2C (New) DR - 08 திருகோண | BT B2C (New) DR - 09 திருகோண | ET 2BC (Old) DR - 10 யாழ் | BT 2BC (New) DR - 10 யாழ் | ET A2C (Old) DR - 10 யாழ் | ET 3B (New) DR - 11 யாழ் | ET 2CS (Old) DR - 11 பொலன் |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந.மயூரன் | ட.லக்ஷன் | கு.விதுர்ஷன் | என்.எம்.பயூஸ் | ஜே.எஸ்.அஜய்டார்வின் | கஜேந்தினி | கி.சனுஜன் | கே.மிரோஜன் |
| ET BCS (Old) DR - 11 யாழ் | ET A2B (New) DR - 12 யாழ் | ET 2BC (Old) DR - 12 யாழ் | BT B2C (Old) DR - 12 திருகோண | ET 2CS (Old) DR - 13 ஹற்றன் | ET 2BC (Old) DR - 14 யாழ் | ET 2CS (Old) DR - 14 ஹற்றன் | ET 2BC (New) DR - 15 யாழ் |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி.அகிலாஸ் | இ.தனுசன் | அ.பா.மு.றஜ்வான் | வி.சுதர்சிகா | மு.ஹசீம் தமீம் | எஸ்.சங்கவி | அ.சபேசன் | ஜெ.எம்.ஹஸ்னி |
| ET 2CS (Old) DR - 16 மட்டக்கள | ET 2BC (New) DR - 16 யாழ் | ET 3C (Old) DR - 16 அம்பாறை | BT 2BC (New) DR - 16 யாழ் | ET B2C (Old) DR - 17 மட்டக்கள | BT 3C (New) DR - 17 யாழ் | ET 2BC (New) DR - 18 யாழ் | BT 2CS (Old) DR - 18 திருகோண |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜோன் பிளமிங் | ஆர்.துதிசன் | சி.விதுஷன் | க.தட்சாயினி | எஸ்.கே.வசீம் | கி.கிருத்திகா | வி.திவாகரன் | வி.கீர்த்தனா |
| BT 2CS (Old) DR - 19 யாழ் | BT BCS (Old) DR - 20 யாழ் | ET 2BC (New) DR - 21 யாழ் | ET 2BC (New) DR - 22 யாழ் | ET 3C (Old) DR - 22 பொலன்ன | BT B2C (New) DR - 22 யாழ் | ET A2C (New) DR - 23 யாழ் | BT 3C (New) DR - 23 யாழ் |



| | | | |
|---|---|---|---|
| கா.கிருஷாந் | ப.கனிமொழி | ஆர்.சுதர்சன் | ர.சாரங்கராஜ் |
| ET B2C (New) DR - 24 யாழ் | BT 3C (New) DR - 25 யாழ் | ET 2BS (New) DR - 28 யாழ் | ET 2CS (Old) DR - 28 யாழ் |

தொழினுட்பப் பிரிவில் தொடர்ச்சியாக ஐந்தாவது வருட சாதனைப் பட்டியல்

நீட்சியுடன் நீங்களும் இணைந்து கொள்ள புதிய பிரிவுகள் வெற்றிகரமான ஆரம்பம்

**A/L 2022,2020 DAY** (C-8783)

**04.01.2020 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு**

"தொழினுட்பப் பிரிவில் வெற்றியை இலக்காகக் கொண்ட மாணவர்களின் ஒரே தெரிவு விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி மாத்திரமே"

## பொது மக்களுக்கான அறிவித்தல்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பொது மக்கள் தங்கள் அன்றாட பயன்பாட்டில் சேகரிக்கப்படும் உக்கமுடியாத பிளாஸ்ரிக், பொலித்தீன், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை உரிய முறையில் வகைப்படுத்தி கீழ்வரும் விபரங்கள் அடங்கிய நிலையங்களில் ஒப்படைக்க முடியும்.

| இடம் | நாட்கள் | நேரம் |
|---|---|---|
| சங்கிலியன் வீதியில் உள்ள நல்லூர் பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| கனகரத்தினம் வீதியில் உள்ள அரியாலை பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| கே.கே.எஸ்.வீதி தட்டாதெரு சந்தியில் உள்ள வண்ணார்பண்ணை பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| கடற்கரை வீதியில் உள்ள பாசையூர் பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| கடற்கரை வீதி நாவாந்துறை சந்தையில் உள்ள நாவாந்துறை பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| கஸ்தூரியார் வீதியில் உள்ள பசார் பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| பிரதான வீதி மடத்தடியில் உள்ள குருநகர் பிரட்டு அலுவலகம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |
| காரைநகர் வீதி காக்கைதீவு மீன் சுழற்சி நிலையம் | திங்கள் – வெள்ளி<br>சனிக்கிழமை | 6.00 - 14.00<br>6.00 - 11.00 |

**கௌரவ முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

# 2019 இல் கற்றதை 2020 இல் வெளிக்காட்டவுள்ளேன் - பும்ரா



உலக பேட்ஸ் மேன்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் யார்க்கர் மன்னன் பும்ரா, 2019-ல் கற்றுக் கொண்டதை 2020-ல் வெளிக்காட்ட இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் பும்ரா. ஒருநாள் போட்டியில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தியதால் இந்த ஆண்டு தொடக்கத்தில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் போட்டி யில் அறிமுகம் ஆனார்.

யார்க்கர், ஸ்லோ பந்துகளை வீசும் பும்ராவால் டெஸ்ட் போட்டியில் ஜொலிக்க முடியுமா? என்ற கேள்வி இருந்தது. ஆனால் ஷார்ட் பிட்ச் பவுன்சர், வேகம் ஆகியவற்றால் எதிரணி பேட்ஸ்மேன்களை கலங்கடித்தார்.

இதனால் டெஸ்ட் போட்டிக்கான பந்து வீச்சாளர்கள் வரிசையில் முக்கிய இடத்தை எட்டினார். ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நம்பர் ஒன் இடத்தில் நீடிக்கிறார்.

உலகமே இவரை தலைசிறந்த பந்து வீச்சாளர் என்பதை ஒத்துக்கொண்ட நிலையிலும், 2019 கற்றலுக்கான ஆண்டு. கற்ற அனைத்தையும் 2020-ல் வெளிக்காட்ட இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பும்ரா தனது டுவிட்டர் பக்கத்தில் "2019 சாதனைகள், கற்றல், கடின உழைப்பு மற்றும் நினைவுகளை உருவாக்குதலுக்கான ஆண்டு. அது மைதானத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மற்றும் எல்லா இடங்களிலும்... 2019-ம் ஆண்டின் கடைசி நாளில், இந்த வருடத்தின் அனைத்தையும் அடுத்த வருடமும் வெளிக்காட்ட காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா மற்றும் வெஸ்ட் இண்டீஸில் இந்திய அணி டெஸ்ட் தொடரை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார். டெஸ்ட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய 3-வது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த வருடத்தில் 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 62 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். மேலும் 58 ஒருநாள் போட்டியில் 103 விக்கெட்டும், 42 டி20 போட்டியில் 51 விக்கெட்டுக்களும் வீழ்த்தியுள்ளார்.

முதுகு வலி காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து விளையாடாமல் இருக்கும் பும்ரா, அடுத்த மாதம் 5-ந்தேதி தொடங்கும் இலங்கை டி20 தொடரில் விளையாட இருக்கிறார்.


**ஹோட்டல் மனேஜ்மன்ட்**
**அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்**



பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்
100% வேலைவாய்ப்பு
இலவச ஆங்கில வகுப்பு
தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்

2020 பதிவுகள் ஆரம்பம்



✦Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)
✦Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)

T.P: 076 057 9999, 021 314 6171
No.1544, K.K.S Road, Jaffna. (C-8571)



**O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான புதிய பிரிவுகள்**

Diploma in English
Spoken English
Certificate in English
Spoken Sinhala
Certificate in Sinhala

**வெளிநாடு செல்பவர்களுக்கான கற்கைநெறிகள்**

**IELTS Academic / General**
**IELTS Life Skills A1 B1 Exam**
Week days &weekend days / Morning and evening classes
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
SIRAMBIYADY LANE, JAFFNA
021222 4550 / 076 1380212 (8790)


## பகிரங்க அறிவித்தல்

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத, நுளம்பு பெருகும் வகையில் உள்ள தனியார் காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளை உடன் துப்பரவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு துப்பரவு செய்யப்படாது உள்ள காணி உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(8792)

**கௌரவ முதல்வர்,**
**மாநகர சபை,யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### முத்து குணசிங்கம்

**(இளைப்பாறிய இயந்திர இயக்குநர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**

மலர்வு 30.04.1934 மறைவு 29.12.2019

காலையடி பண்டைத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் 35/7 குமாரசாமி வீதி கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து குணசிங்கம் கடந்த (29.12.2019) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-அன்னபபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் குகனேஸ்வரி, சிவகுமாரன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர்,மாந்தை மேற்குப் பிரிவு, மடு வலயம்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், விஜயராகினி (ஆசிரியை, இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி) கலாமதி (சுவிஸ்), முரளீதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்தன்(நோர்வே), நிறியா(நோர்வே), நிஜிந்தன், அபிநயா(மாணவி உடுவில் மகளிர் கல்லூரி), பிரவீன் (சுவிஸ்) ஐக்கியன்(கனடா), கேசியன் (கனடா), கிரிசியன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2020) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(1684)

35/7 குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தையா கதிராசிப்பிள்ளை

தோற்றம் 14.02.1943 மறைவு 31.12.2019

ஆனைக்கோட்டை, புளியங்கண்டு பிள்ளையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கதிராசிப்பிள்ளை நேற்று (31.12.2019) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் கந்தையாவின் அன்பு மனைவியும் கதிரவேலு-சின்னத்தங்கத்தின் அன்புச் சகோதரியும் பாலமுருகேசன், விசுவநாதன் (பிரான்ஸ்) முருகதாஸ் (தபாலகம் -மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தினி (உப தபாலகம் -ஆனைக்கோட்டை) லோகவேணி(கனடா), குகதர்சினி (தென்னைப் பயிர்ச் செய்கை சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் நிருபா, நிதுரஷன், வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.01.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் காக்கைதீவு கரையம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கண்டு பிள்ளையார் வீதி,
ஆனைக்கோட்டை.

(8797)

தகவல்:-
குடும்பத்தினர்

# கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை சிறகடிக்கும் சிட்டுக்கள்-2019



N.Sivasujan 188 | P.Mathusajini 186 | S.Shagana 186 | R.Mathuriyan 185 | K.Piramila 183 | T.Praveen 183 | P.Shajani 178 | S.Janusthiga 178 | K.Rakavi 177 | S.Thanujan 177



R.Praveen 177 | J.Vikash 177 | J.Nijani 176 | S.Vipushan 176 | N.Sanujan 175 | S.Hesiga 174 | N.Dirukshika 174 | R.Pavithiran 174 | A.Mathunitha 174 | R.Aboorvan 174



S.Saarujan 173 | K.Varshavi 173 | S.Kavishna 173 | S.Logithan 173 | N.Janagan 172 | R.Monisha 172 | T.Kajalini 172 | P.Shayeesan 172 | K.Parijan 171 | K.Anushthan 171



R.Shanthavi 171 | P.Jathurshaa 170 | S.Pavishan 170 | K.Thakshika 169 | U.Dilaahithan 169 | S.Thirikajan 169 | N.Akshaya 168 | M.Sathviga 168 | S.Nakeerthana 168 | U.Tharmika 168



S.Thaksha 168 | T.Thishanuga 168 | S.Saithanya 168 | T.Jathuvarnan 168 | S.Sarnika 168 | R.Gowthaman 168 | P.Biruthviga 168 | R. Vaishnavi 167 | R.Asmika 167 | S.Thulasika 167



L.Vaishnavi 167 | S.Sujanan 167 | P.Harshini 165 | N. Shibinajan 165 | M.Sangeetha 165 | A.Anushigan 164 | V.Jathikan 164 | K.Salini 164 | V.Nithuja 164 | S.Luxiya 163



K.Loyan 163 | L.Aiswarya 163 | K.Krishigan 163 | G.Shaganan 162 | K.Kamalasowparnika 162 | A.Akshaya 161 | K.Kartiken 161 | R.Ashwin 161 | S.Tharmithan 160 | S.Thanupriya 160



K.Kuperan 160 | T.Mathuvanthi 159 | R.Mathushan 159 | A.Tharmigan 159 | S.Aarahan 159 | I.Sulaxan 158 | G.Shathveekan 158 | S.Tharunan 157 | B.Sarvinaa 157 | K.Shanjai 156



S.Havinaya 156 | M.Sathvigan 155 | T.Thiruvarankan 155 | Y.Sowmya 155 | T. Lishani 155 | G.Banujan 155 | L. Vaishnavi 155 | A.Sansika 155 | R.Thulasikan 155 | S.Akshaya 155



K.Abinaya 154 | S.Saranya 153

2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற 92 மாணவர்களையும் மற்றும் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் அவர்களின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**2019 தரம் 5 மாணவர்களின் பெற்றோர்**

(1671)

# கனவுகளும் பலன்களும்

## பலவகை கனவுகள் வந்தால்...

கட்டிலைக் கனவில் கண்டால் சுகமான வாழ்க்கை அமையும். கட்டிலில் படுத்திருப்பது போலக் கனவு கண்டால் திருமணம் நடக்கும். திருமணமானவராக இருந்தால் புத்திர பாக்கியம் உண்டாகும். கட்டிலில் இருந்து கீழே விழுவது போல அல்லது கட்டில் ஒடிந்து விடுவது போலக் கனவு கண்டால் எதிர்மறையான பலன்கள் நடக்கும்.

கலப்பையைக் கனவில் கண்டால் தொழில் விருத்தியாகும். விளைச்சல் அதிகரித்து இலாபம் கிடைக்கும்.

சாணத்தைக் கனவில் கண்டால் நோய்கள் குண்மாகும். பணமும் புகழும் சேரும். பூட்டு, சாவியைக் கனவில் கண்டால் நண்பர்களால் உதவி கிடைக்கும். பணவரவு ஏற்படும். நீதிமன்றங்களைக் கனவில் கண்டால் வழக்குகளில் சிக்கி அவதிப்பட நேரிடும்.

ஒரு பெண் முறத்தினால் புடைத்துக் கொண்டிருப்பது போலக் கனவு கண்டால் குறைகள் நீங்கும். குழப்பங்கள் தீர்ந்து மனம் தெளிவாகும்.

திரைப்படம் பார்ப்பது போலக் கனவு கண்டால் எதிர்காலத் திட்டங்கள் உருவாகும்.

ஜோதிடம் பார்ப்பதாகக் கனவு கண்டால் கனவில் எத்தகைய பலன்கள் கேட்கப்பட்டதோ அது நடக்கும்.

தான் துறவு மேற்கொள்வதாய் கனவு கண்டால் வாழ்க்கையில் பற்று இல்லாமலே காலம் கழிக்க நேரிடும். பல தொல்லைகள் உண்டாகும். ஆனால் பாதிப்பு இருக்காது.

சாவிக் கொத்து காணாமல் போவது போல் கனவு கண்டால் பல கஷ்டங்கள் உண்டாகும்.

ரோபோவை இயக்குவது போல கனவு கண்டால் தமக்கு கீழே வேலை செய்பவர்கள் சொன்னபடி நடப்பார்கள்.

கம்பியூட்டரைக் கனவில் கண்டால் ஞாபக சக்தி வளரும். கம்பியூட்டரை இயக்குவது போலக் கனவு கண்டால் அறிவியல் துறையில் சிறந்த எதிர்காலம் உருவாகும்.

வீடியே விளையாட்டுச் சாதனத்தைக் கனவில் கண்டால் நரம்புத் தளர்ச்சி நோய் வரலாம். அந்த சாதனத்தில் விளையாடுவது போல் கனவு கண்டால் மூளை பாதிப்பு ஏற்படலாம்.

தொலைக்காட்சிப் பெட்டியைக் கனவில் கண்டால் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையும். ரி.வி. பெட்டியை இயக்குவது போல் கனவு கண்டால் திட்டங்கள் உருவாகும். ரி.வி.பெட்டி உடைந்து விட்டது போலக் கனவு கண்டால் தொழிலில் நட்டம் ஏற்படும்.




நாட்டை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரை அழகுபடுத்தும் முயற்சியில் இளைஞர், யுவதிகள் ஈடுபட்டு வருகின்றனர். சாவகச்சேரி நீதிமன்ற வெளிப்புற மதில் மற்றும் சங்கத்தானை புகையிரத நிலைய வெளிச் சுவர் உள்ளிட்ட இடங்களில் இளைஞர், யுவதிகள் ஓவியங்களை வரைந்து வருகின்றனர். தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையிலான ஓவியங்களை அவர்கள் வரைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-சுபேசன்)

# தேசிய மட்டத்தில் முதலிடம்



(கண்டி)

கண்டி தேசிய கலை நிறுவகத்தில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டிற்கான பிரதீபா தேசிய மட்ட நடனப் போட்டியில் (கணேஷ கௌத்துவம்) முதலாம் இடத்தினை தென்மராட்சி கலாசார மத்திய நிலைய மாணவிகள் பெற்றனர். (இ-29)

# காப்பெற் வீதியாக மாற்றம்



(கொடிகாமம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் மெகா நிறுவனத்தால் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட கொடிகாமம்- பருத்தித்துறை (AB31) வீதி அகலிப்புப் பணி முடிவுறுத்தப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. (இ-114)

### தாக்குதலைக் கண்டித்து

# யாழ். நகரில் நாளை கண்டனப் போராட்டம்

(குப்பிழான்)

ஜனநாயக வழியில் நீதி கேட்டுப் போராடிய காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக கண்டனப் போராட்டமொன்று நடைபெறும்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறும் குறித்த போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. (இ-18)

# விற்பனைக் கூடம் திறப்பு

(குப்பிழான்)

கருவி நிறுவனத்தின் சூழல் நேய அலகினால் இயற்கை வழி விவசாய முறை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி வகைகளை உள்ளடக்கிய விற்பனைக் கூடமொன்று இன்று புதன் கிழமை காலை கோப்பாய் தெற்கு மாதா கோயில் ஒழுங்கையில் திறந்து வைக்கப்படும். (இ-18)

# இராசி பலன்

**மீனம்**: உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மேடம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்**: புதிய முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்**: கூட்டுத்தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்**: மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற் கொள்வீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | கிரகநிலை | | |
| சுக் | சந்திராஷ்டமம் பூரம் | | |
| சூரி, சனி, புத, குரு, கேது | செவ் | | |

**01.01.2020**
மார்கழி 16, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
சஷ்டி மாலை 6.20 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.26 மணிவரை
சுபநேரம் 4.59-6.29 மணிவரை
இராகுகாலம் 12.29-1.59 மணிவரை
உதயத்தின் முன் திருவெம்பாவை ஆரம்பம்
விநாயகர் சஷ்டி விரதம்

வளவன்

**கடகம்**: உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்**: கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: வழிபாட்டில் ஆர்வம் கூடும், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு**: மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பொருளாதார நிலை உயரும்.

**விருச்சிகம்**: வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கன்னி**: உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும்.

# புத்தாண்டு சிறப்பு மலர் 2020


## BBCஇன் புதிய அனுமதிகள்

British BUSINESS COLLEGE
*Where Students Come First*

BBC பாலர் பாடசாலையின்
20ஆவது வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2020ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான **Canada** கல்லூரியின்
பயிற்றுவிப்பாளர்களினால்
பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

20வது ஆண்டை நோக்கி BBC

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டுத் திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

**2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | $2^+$ முதல் 3 வரை | $3^+$ முதல் 4 வரை | $3^+$ முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

## congratulations!

British Business College
Congratulates our Pre - School & Nursery Students who have successfully completed the Pre - School - 2019



## BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

APPLY NOW
SANCHU 0777102131

BSc (Hons) BMS

BTEC HND BMS

FOUNDATION IN SCIENCE

After A/L



## BIOMEDICAL SCIENCE

**Leading to BSc (Hons)**

UGC Recognized
TVEC Approved

20 years of TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

BTEC Approved Centre | Pearson | Southampton SOLENT University | UNIVERSITY OF WOLVERHAMPTON | RICS | CIOB | University of East London

TVEC APPROVED | ISO 9001:2015 CERTIFIED

Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna. 021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk

# புத்தாண்டு சிறப்பு மலர் 2020

வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்





இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 7877
newmaithily40@gmail.com
newmaithily Jewellers
0094 21 221 7878




இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2031

# புத்தாண்டு சிறப்பு மலர் 2020


அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg No.DS882

## சசிகா லேணர்ஸ்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்!!



**தலைமை காரியாலயம்**

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7578, 7678/ 077 614 0361 077 722 6247

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

TP: 021 226 0999/ 071 775 0999

**கிளை நிறுவனங்கள் :**

மல்லாகம் : 021 224 3393
பண்டத்தரிப்பு:021 225 2333
காரைநகர்: 021 225 2454
சங்கானை: 021 225 1664
வேலனை: 021 221 5472
யாழ் மத்தி (TOWN): 021 222 8004

E-mail: sasikadrivingschool@gmail.com
Web-sasikalearners.com



## கிருபா லேணர்ஸ்
## KIRUBAA LEARNERS

D.S 589

அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.22டீ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4353, 021 492 3200, 071 4546 960

விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
இரவு நேர வாகனப் பயிற்சி.
தவணை முறைக் கட்டணங்கள்.
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி.
விசேட பரீட்சை ஒழுங்குகள்.



வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

No.1 Driving School

**யாழ்ப்பாணம்**

- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.(மதவடி அருகில்) 021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி அருகில்) 021 222 6699, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைசந்தி, தெல்லிப்பளை. 021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்) 021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, போலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 4546 958
- இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்) 021 221 4488, 077 722 7740
- காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி. 021 225 2500, 076 2121 299

**வவுனியா**

- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக) 024 222 7777, 0777 100 444

**மன்னார்**

- 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732

**கிளிநொச்சி**

- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505, 071 4546 955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818, 070 333 7171

# புத்தாண்டு சிறப்பு மலர் 2020












# புத்தாண்டு சிறப்பு மலர் 2020



## யாழ். ஆயரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

2020 ஆவது புதிய ஆண்டு மலர்ந்துள்ள வேளை எல்லோரும் இப்புதிய ஆண்டை மகிழ்வோடும் புதிய ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்களோடும் எதிர்பார்த்துள்ளனர்.

இப்புதிய ஆண்டில் உங்கள் அனைவரின் உள்ளத்து எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவு பெற வேண்டுமென இறையாசி வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது 2020ஆம் ஆண்டின் முதல் தினத்தை ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியாவின் தினமாக அறிவித்து அன்னையின் பாதுகாவலில் புத்தாண்டை தொடங்கி அன்னையின் வழிகாட்டலில் ஆண்டு முழுவதும் பயணிக்க எமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியா உங்கள் அனைவரையும் தாய்க்குரிய அன்புடன் 2020 ஆம் ஆண்டு முழுவதும் பாதுகாத்து வழிநடத்துவாராக.

யாழ். மறைமாவட்டம் மலரவிருக்கும் புத்தாண்டை "துயருறுவோர் ஆண்டாக" பிரகடனம் செய்கின்றது. வாழ்வில் பல்வேறு நிலைகளில் துன்பப்படுகின்ற எல்லோரையும் எம் கண்முன் நிறுத்தி அவர்களுக்காக செபிக்கவும், அவர்களின் துன்பங்களில் உதவிக்கரம் கொடுத்து, அவர்களை தாங்கிக் கொண்டு, வாழ்வை முன்னெடுக்க முன்வர வேண்டும். சிறப்பாக காணாமல் போனோர் விடயம், அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், வேலையற்றோர் பிரச்சினை, போதைப் பொருள் பிரச்சினை போன்றவற்றை முன்வைத்து செயற்பட அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

புதிய ஆண்டில் இறைவன் எம்மை எப்போதும் பாதுகாத்து வழிநடத்துவாராக. 2020 புதிய ஆண்டு முழுவதும் இறையாசீர் என்றும் உங்களோடு இருந்து வழிநடத்த வாழ்த்துகிறோம்.

**கலாநிதி யஸ்ரின் பேணாட்**
**ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ்.ஆயர்.**



## நம்பிக்கையூட்டும் புத்தாண்டை வரவேற்போம்

நம்பிக்கையூட்டும் நல்லுறவால் பிறக்கட்டும் புத்தாண்டு. மாற்றங்கள் மனித மாண்பை மலரவைக்கும். மனித நேயப் பண்புகளால் மலரட்டும் 2020 ஆம் ஆண்டு. எதிர்பார்ப்புக்கள் ,ஏமாற்றங்கள் ,சந்தர்ப்பங்கள் ,சவால்கள் எம்மினத்தில் ஏற்றம் பெறும் அனுபவங்களாக கற்றுத் தந்த பாடங்களை மூலதனமாக்கி புத்தாண்டில் புது வாழ்வை சுவைக்க வாழ்த்துவோம்.

இளையோர் சிறுவர்கள் எதிர்காலம் சிறக்க இல்லங்களது குடும்ப உறவுகளின் ஒளிகளாக வழிகாட்ட, வழிபாடுகளை வாழ்வாக்க வெளிப்படுத்தும் ஆன்மீக தலங்கள், பொதுச்சேவை மன்றங்கள் நல்வழி காட்டும் மையங்களாக செயற்படும் புத்தாக்கமிக்க செயல்களால் புத்தாண்டை வரவேற்போம்.

இன,மத குரோதத்தை தூண்டும் வன்முறை கலாசாரத்தை ஒதுக்கி, நல்லுறவாடலால் நம் தேசம் மலர உழைக்கும் நல்லாட்சியாளர்களை உருவாக்கி துன்புறும் மனங்களில் துயர்களையும் நற்சேவையாளரை உருவாக்கி உருவாக பிறப்புக்கு அர்த்தமூட்டும் வாழ்வால் நம்பிக்கை யூட்டும் வாழ்த்துக்களை பகிர்வோம்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**கலாபூஷணம் செ. யோசப்பாலா,**
**செயலாளர்,**
**கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.**



## யாழ். மாநகர முதல்வரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

2020 புத்தாண்டு வளப்பமுள்ள செல்வச் செழிப்பான வருடமாக மலர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். இவ்வருடத்தில் நானிலம் உள்ள மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கட்டும்! துன்பங்கள், துயரங்கள் நீங்கி உலகமெங்கும் மக்கள் மத்தியில் சமாதானமும் அமை தியும் நிலவட்டும் என வேண்டுகின்றேன்.

இவ்வருடத்தில் இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! இதுவே எனது இதயபூர்வமான புதுவருட வாழ்த்தாகும்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**யாழ்.மாநகர முதல்வர்**
**யாழ்ப்பாணம்.**



## செஞ்சொற் செல்வரின் புத்தாண்டுச் செய்தி

இறையருளால் அனைவரும் புதிய ஆண்டில் சிறப்பாக வாழவேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்போம். எம்மை வாழ்விக்கும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்கள் இ.வ்வுலகத்திற்கு சாதகமாக அமையவேண்டும் என்று பிரார்த்திப்போம். எங்கள் நாட்டில் அமைதியும், அறமும், அன்பும் சிறக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம். மக்களை வேதனைப்படுத்தும் சகல நோய்களுக்குமான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, அனைவரையும் காப்பாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படவேண்டும் என வேண்டிப் பிரார்த்திப்போம். உலகம் முழுவதும் போர் இல்லாத மனிதநேயம் சிறக்க வேண்டிப் பிரார்த்திப்போம்.

காலம் வேகமாக கடந்து கொண்டே இருக்கும். காலத்தை நாம் வெல்ல முடியாது. எனவே ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டியது எங்கள் கடமையாகும். தவப்பொழுதாக ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் கருதவேண்டும். அவப்பொழுதாக காலத்தை செலவு செய்யாமல் நல்லகாரியங்களை நாம் செய்வதற்கு முற்படுவோம். கடவுள் எமக்கு தந்த ஆறறிவைப் பயன்படுத்தி நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழவைப்போம். கோபத்தை வளர்ப்பதை நிறுத்தி அனைவரிடத்திலும் அன்பை பெருக்குவோம். பிறரை குறைகாண்பதை விட எம்மிடம் உள்ள தவறுகளை உணர்ந்து நாம் திருந்துவோம். இந்த அழகான உலகத்தில் பிறந்த நாங்கள் அழகாக வாழக் கற்றுக் கொள்வோம். ஆலயங்கள் தோறும் அறச்சிந்தனைகளைப் பரப்புவோம். வீடுகளில் இரக்கத்தையும், கருணையையும் வளர்ப்போம். பள்ளித்தலங்களில் எதிர்காலச் சந்ததிக்கு கல்வியோடு பண்பையும் வளர்ப்போம். வீண்விரயங்களைத் தவிர்ப்போம். ஆடம்பரங்களை குறைத்து ஆக்கபூர்வமான காரியங்களுக்குச் செலவு செய்வோம். கடந்து செல்லும் ஆண்டில் நமக்கு கிடைத்த நன்மைகள் குறித்து கடவுளுக்கு நன்றி சொல்வோம். கடந்து செல்லும் ஆண்டில் எம்மை விட்டு இயற்கை எய்தியவர்களுக்காக நன்றியோடு பிரார்த்தனை செய்வோம். நாம் விட்ட தவறுகள் புதிய ஆண்டில் தொடராமல் இருக்க திட்டமிடுவோம்.

அன்பர்களே 2020 ஆம் ஆண்டை மங்கலகரமாக வரவேற்போம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ நாம் ஆயத்தமாவோம். புதிய ஆண்டு எம்மண்ணில் அனைவருக்கும் மகிழ்ச்சிக்குரிய ஆண்டாக அமைய, இறைவனை வேண்டி, அனைவருக்கும் இதய பூர்வமான நல்லாசிகளையும், நல் வாழ்த் துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்.**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**
**இலங்கை.**






## புதுவருட வாழ்த்துச்செய்தி

இன்றுமீண்டும் ஒரு புதியஆண்டினை வரவேற்கும் வாய்ப்பை இறைவன் நம் அனைவருக்கும் வழங்கியுள்ளான். இப் திய 2020 ஆம் ஆண்டு நம் எல்லோருக்கும் சுபீட்சமும், மகிழ்ச்சியும், அமைதியும், சமாதானமும், நேர்வழியும், இறைஅருளும் நிறைந்த ஆண்டாக வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும். இப் புத்தாண்டில் எமது எதிர்பார்புகளும், தேவைகளும்,அபிலாஷைகள் யாவும் நிறைவேற இறைவன் அருள்புரிவானாக.

மலர்ந்திருக்கும் இவ்வாண்டில் இன,மத வேறுபாடுகளை களைந்து மனிதன் என்ற ரீதியில் எல்லோரும் நாம் ஒரு தாய் மக்கள் என்ற கண்ணோட்டத்தில் ஒற்றுமையுடனும், புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுப்புடனும், சாந்தி, சமாதானத்துடன் சகல சௌபாக்கியத்தையும் பெறுபேற்றுக்களையும் பெற்று வாழ்வதற்கு வாழ்த்துகின்றேன்.

இந்நாளில் நாம் புத்தாடை அணிந்து, அறுசுவை உணவுகள் உண்டு, மகிழ்ச்சியாக கொண்டாடும் அதேவேளை நம்மைச் சூழவுள்ள ஏழைகள், இயலாதவர்களுக்கும்,- பாதிப்படைந்தவர்களுக்கும் பகிர்ந்தளித்து அவர்களும் எம்மைப் போன்று மகிழ்ச்சியாக இப் புத்தாண்டை கொண்டாடி வரவேற்க ஆவன செய்வோமாக.

**மௌலவி பி.ஏ.எஸ்.சுப்யான்,**
**தலைவர், யாழ்.மாவட்டசர்வமதப் பேரவை.**



## அருளாசிச் செய்தி

இன்று புத்தாண்டு பிறந்திருக்கின்றது.இந்த ஆண்டிலாவது இலங்கையில் அமைதியும் ஆனந்தமும் மங்களமும் சுபீட்சமும் வந்து எல்லோரும் சந்தோஷம் நிறைந்த நிம்மதியான வாழ்வில் மகிழ்ந்திருக்க எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானுடைய திருவடிகளை வணங்கி வாழ்த்தி அனைவருக்கும் ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

இன்றைய இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறந்திருக்கும் நல்ல வேளையிலே அனைத்து மக்களும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் ஒருவரோடொருவர் உறவு கொண்டாடி குசலம் விசாரித்துப் புத்தாடை அணிந்து எல்லோருடனும் அன்பாகப் பழகி ஆனந்த வாழ்க்கையிலே திளைத்திருக்க வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்தித்து எல்லோருக்கும் நல்லதே நடக்க வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இன்று முதல் எமது ஈழமணித்திருநாட்டில் ஆன்மீகம் தழைத்து நல்லொழுக்கம் மேலோங்கி எல்லா மக்களும் நோயின்றி நலமே வாழ வாழ்த்துகின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய**
**சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர்**






## "புத்தாண்டில் புது வாழ்வு உதயமாகட்டும்"

புவியின் சுற்றுவட்டப் பாதையில் ஒரு சுற்று முடிந்து மறு சுற்று ஆரம்பமாகும் புத்தாண்டு நம் எல்லோருக்கும் நலமும் வளமும் பெருக உதயமாகின்றது. 2019 முடிந்து புத்தாண்டு 2020 பிறக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் போது நம் நம்பிக்கைகள் உயர்ந்து கொண்டே வருகின்றன. ஆனால் கழிந்து போகும் வருடம் எமக்கு வளமான, நிம்மதியான வாழ்வை வழங்கும் என்ற ஒரு நம்பிக்கையில் அதை எதிர்கொள்கின்றோம். அது நிச்சயம் எம் அனைவருக்கும் நலத்தையும் வழங்கும் என்று நம்புவோம்.

எம் பெருமாட்டியின் பேரருட்திறத்தால் மலரும் இப் புத்தாண்டில் புது வாழ்வு உதயமாகும் என்றும் எம் அனைவர்க்கும் நல்வாழ்வு மிளிரும் என்றும் அம்பிகையின் திருப்பாதங்களைச் சேவித்து ஆசி கூறி நிறைகின்றேன்.

**சர்வே ஜனகா் சுகினோ பவந்து**
**"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"**

**சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக**
**தேசிகர், JP, இந்துமதகுரு பீடாதிபதி,**
**பிரதமகுரு , வல்வை ஸ்ரீ முத்துமாரி**
**அம்மன் தேவஸ்தானம், தர்மகர்த்தா,**
**புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம்.**

## பொல்லாத காலம் போகட்டும் நல்லகாலம் இனியாவது மலரட்டும்

**புத்தாண்டே வருக! வருக! வருக!**
**இன்பங்கள் தங்கிட இனிதே வருக!**
**கடந்த ஆண்டில் வந்த துன்பங்கள்**
**துயராங்கள் யாவும் கனவாகப்**
**போய் மறையட்டும்**
**நல்லாட்சி எல்லாம்**
**வலுவிழந்து போயிற்று**
**காணி விடுவிப்பு, கைதிகள் விடுவிப்பு**
**காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்**
**கதையும் தொடர்கிறது**
**வெள்ளப் பெருக்கு மண் சரிவுகள் வந்து**
**வேதனை தருகிறது எம் மக்களுக்கு**
**புத்தாண்டே இவ்வாண்டு மக்களுக்கு**
**நல்வாழ்வு தருவாயா?**
**புதிய ஆட்சிதனில் எம் மக்களுக்கு**
**இனியாவது நல்வாழ்வு**
**மலரட்டும்-புத்தாண்டே**
**தமிழர் தம் வாழ்வில் நிம்மதியை**
**கொண்டு வருவாயா?**

**நயினை விசு இராசநாயகம்**

# மங்கையர் நலமோங்கி மாநிலம் சிறக்க வழிகாட்டும் மார்கழித் திருவெம்பாவை



மாதங்களில் சிறந்த மாதமாக மார்கழி மாதம் குறிப்பிடப்படுகிறது. மாதங்களில் நான் மார்கழி எனக் கண்ணன் திருவாய் மலர்ந்துள்ளார். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறையாமம் ஆகும். மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயிலெழுந்த ஏனையோரையும் துயிலெழுப்பி கூட்டாகச் சென்று சுற்றிலும் ஏனைய நீர் நிலைகளிலும் நீராடி நோன்பு நோற்று இறைவனை வழிபாடு செய்து உய்வு பெறும் வழக்கம் மார்கழி நோன்பு என்றும் பாவை நோன்பு என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மார்கழி மாதத்து பூரணை நாளை இறுதியாகக் கொண்டு முதல் பத்து நாட்கள் இதனை அனுஷ்டிப்பர்.இந்தப் பத்து நாட்களையும் திருவெம்பாவைக் காலம் என்பர்.

மார்கழி நோன்பு, பாவை நோன்பு என்பன இந்து மக்களிடையே பல காலமாக அனுட்டித்து வரப்படுகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை, ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை என்பனவற்றிலிருந்தும் இவை அறியக்கிடக்கின்றன. நாட்டில் வரட்சி மிகுந்து வனம் குன்றும் போது, மழை வேண்டியும் சிறந்த உத்தம கணவர்களை பெற்றுக்கொள்ள வேண்டியும் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத் தில் பார்வதி தேவியைக் குறித்து மார்கழி நீராடி விரதம் மேற்கொள்வது பண்டைய வழக்கம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவெண்ணாமலையில் சிவனைத் தரிசனம் செய்ய வந்த போது மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் வழக்கப்படி பொழுது புலர்வதற்கு முன்னர் வைகறை யாமத்தில் துயிலெழுந்து வீடுவீடாகச் சென்று தம் தோழியர்களையும் கூவி எழுப்பி அவர்களையும் அழைத்துக் கொண்டு ஆடியும், பாடியும் ஆற்றுக்குச் சென்று நீராடிவிட்டு பார்வதி தேவியின் பிரதிமையை ஈர மண்ணால் செய்து வைத்துத் தத்தம் வேண்டுதல்கள் நிறைவேற வழிபாடு செய்யும் பக்திப் பரவசக் காட்சியைக் கண்ணுற்றார்போலும். தாமும் இறைவனை துதிக்க விரும்பி தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவித்து கண்ணுற்ற நிகழ்ச்சிகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு நாயகன் நாயகி பாவத்தில் பாவைப் பாட்டுக்களைப் பாடி தன்னிலையை வெளிப்படுத்த எண்ணினார் போலும். இதனாலேயே திருவெம்பாவைப் பாடல்கள் தோன்றின. இவ்வாறு மாணிக்கவாசகரால் திருவெண்ணாமலையில் அருளப்பட்ட திருவெம்பாவைப் பாடல்களை இன்றும் சைவ ஆலயங்களில் மார்கழி மாதத்துப் பூர்வபட்ச ஆறாம் நாள் தொடங்கிப் பூரணை ஈறாகவுள்ள பத்து நாட்களிலும் அதிகாலையில் உள்ளம் உருகப் பாடிப் பரவுவதைச் சைவ மக்கள் நியமமாகக் கொண்டு வருகின்றனர்.

திருவெம்பாவைக் காலங்களில் சிவனடியார்கள் பொழுது புலர்வதன் முன் நீராடி இறை சிந்தனையோடு வீதி வீதியாகச் சென்று திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை இசைத்து வீடுகளின் வாயில்களில் வெண் சங்கும் முழங்கும் வழக்கம் நமது ஊர்களில் இருந்து வந்துள்ளது.

திருக்கோயில் இல்லாத ஊர், திருவெண்ணீறு வழங்காத ஊர், திருவெண் சங்கு முழங்காத ஊர் என்பவை ஊர்களல்ல. அவை அடவிக் காடுகளே என்று ஆன்றோர் கொண்டனர். நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் ஊக்குவித்தனர்.ஆனால் தற்காலத்தில் இவை அருகிவருவதை காணலாம். இவை நாம் பாரம்பரியமாகப் பேணி வந்த கலாசாரமாகும் என்பதை மறந்து விடலாகாது.

திருவெம்பாவையின் நிறைவு தினமாகிய திருவாதிரைத் திருநாளில் அதிகாலையில் சிதம்பரத்தில் நடேசர் அபிடேகமும்,ஆருத்திரா தரிசனமும் இடம் பெறுகின்றது. ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்புப் பெயர் பெற்ற காரைநகர்ச் சிவன் கோவிலும் திருவாதிரைத் தரிசனம் பக்தி பூர்வமாக திகழ்கின்றது. சைவப் பெருமக்கள் யாவரும் மார்கழித் திருவாதிரையினை சிவனை வேண்டி இந் நாட் களில் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

செந்நாப்புலவர். மதுரகவி .காரை.எம்.பி. அருளானந்தன்.



## ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் கோயில் 01.01.2020 தொடக்கம் 10.01.2020 வரையும் உயிர்களுக்கு வீடுபேறு தருதற்கு கூத்தப்பிரானுக்கு திருவெம்பாவை திருவிழாவைச் செய்து அருளொளி விளங்கும் அழகிய திருக்கோலத்தைக் கண்ணாரக் காண்பதே பிறவிப்பேறாம்- ஓம் நமசிவாய

ஈழத்துச் சிதம்பரம் ஆறுகள் எவையும் இல்லாத யாழ். நாட்டில் என்றும் வற்றாத ஆறு ஒன்று. நாடெங்கணும் பாய்ந்து எல்லாத் திசைகளையும் நோக்கி ஓடி நாட்டினை வளம்பெறச் செய்கிறது. ஈழத்துச் சிதம்பரத்தின் தலம், தீர்த்தம், மூர்த்தி என்னும் மூன்றினதும் பெருமைகளைக் கூறி உறுதியான பக்தியுடன் இறைவனை இங்கு எழுந்தருளச்செய்து வேத சிவாகமங்களும் திருமுறைகளும் உயர் பேறுகளை ஆன்மாக்களுக்கு ஈட்டித்தரும் என்ற உண்மையை எங்கள் மனத்தில் செவ்வனே பதிய வைக்கிறது.

உயிர்களுக்கு வீடுபேறு தருதற்கு ஐந்தொழில் நடனத்தை விளையாட்டாகச் செய்கின்ற சதுரப்பாடுடைய கூத்தப்பிரானுக்கு திருவெம்பாவை திருவிழாவைச் செய்து ஆகமங்களில் விதித்த முறைப்படி பெருமைதரும் திருமுழுக்காட்டி அருளொளி விளங்கும், அழகிய திருக்கோலத்தைக் கண்ணாரக் காண்பதே பிறவிப் பேறாகும். ஐந்தொழில் நடனத்தை விளையாட்டாகச் செய்து உயிர்களுக்கு பேரின்பத்தை அருளுஞ் சாதுரியம் மிக்கவராதலின் "வீடுதரக் கூத்தாடும் வித்தகர்" திருமுழுக்காட்டுவதனாற் திருவுருவத்திற் திருவருள் சுடர்விட்டு விளங்குமாதலின், பிறர்க்கு திருக்கோலம் ஆகும்.

சிவபெருமானை மணிவாசகர் பெருமான் திருப்பள்ளியினின்று எழுந்தருள்க என்னும் கருத்து , துரோதான சுத்தி என்பது, இதுவரை உயிர்களுக்கு மறைப்பினை அளித்து வினைப்போகங்களை நுகர்த்திய துரோதான சக்தி அருட்சக்தியாக வெளிப்படுங்காலமே வைகறை. இதனால் துரோதான சக்தியின் ஆற்றலால் தூங்கிய மணிவாசகப் பெருமானைச் சிவபெருமான் எழுப்ப, அவர் திருவருளோடு கூடி விளங்கும்போது இவரை இவ்வண்ணம் உய்யக் கொண்டோம் என்று கருணைப் பெருக்கால் இறைவன் கண்ணயர சிவபெருமானை மணிவாசகப்பெருமான் திருப்பள்ளியினின்று " எழுந்தருள்க" என ஓதிய திருப்பள்ளியெழுச்சியையே நாமும் ஓதுவோம். இறைவனை எழுப்புதலே திருப்பள்ளியெழுச்சியின் பயன் என்பதைத் தெய்வச் சேக்கிழார் பெருமான்,

**"நீறணிந்தார் அகத்திருளும்**
**நிறைகல்கும் புறத்திருளும்**
**மாறவருந் திருப்பள்ளியெழுச்சியினால்"**

என நாவுக்கரசர் புராணத்தில் அறிவித்ததை நாம் கவனித்து மார்கழி மாதம் பூராகவும் ஓதி "ஓம் நமசிவாய" திருவாதிரைத் திருநாளில் நடராஜப்பெருமானை நினைந்துருகாதவர்களும் தரிசனஞ்செய்யாதவர்களும் எடுத்தவுடம்பு மக்களுடம்பாகாது " பன்றியினுடம்பேயாகும்" என்று சைவநன்னெறித் திரட்டிற் கூறப்படுகிறது.

தமிழகத்துச் சிதம்பரம் போன்று ஈழத்துச் சிதம்பரம் ஆவது காரைநகர் திண்ணபுரம் ஆகும்.

திருக்கோயில்களில் நிகழும் திருவிழாக்கள் வழிபடுகின்ற எல்லோருக்குந் திருவருள்பாலிக்குந் தீட்சைக்காலமென்பதலால் எல்லோரும் தம்மைக் குரு தீட்சையால் வீடு பேறடையுஞ் சீடனாகப் பாவித்து மன மெய் மொழிகளைச் சிவனுக்காக்கி உலகத்துச் சிந்தை, உலகத்துப் பேச்சு, உலகத்துச் செயல்கள் இன்றி மெய்யன்போடு நிறையத் தொழுது பேரின்பம் நிறைதல் பெறுவோம்.

திருப்பள்ளியெழுப்பும் பத்துப் பாடலும் இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் உபகாரம் மறைப்பை நீக்கித் திருவருள் பாலித்தலே!

**"ஏர் மருவு திருப்பள்ளி யெழுச்சி பணிவிடை கேட்டு**
**ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்பு செய்யும் இயல்பே"**

(சி-8787)

ஓம் நமசிவாய

க.கு.க.சிவபாலன், அடியாருக்கு அமுதூட்டும் அண்ணல், போசகர், மாணிக்கவாசகர் மடாலயம்

# சுபீட்சத்தின் ஆண்டாக 2020ஐ மாற்ற திடவுறுதி புதியதோர் யுகம் தாய் நாட்டில் மலர வேண்டும்

## ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



(கொழும்பு)

பொருளாதாரம், அரசியல், சமூக கலாசாரம் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய அனைத்து துறை களிலும் புதியதோர் யுகம் நமது தாய் நாட்டில் மலர வேண்டும் என சகல இலங்கையர்களும் எதிர்பார்த்திருக்கின்ற ஒரு தரு ணத்திலேயே இந்த புத்தாண்டு பிறந்திருக்கின்றது.

அந்த வகையில் மலர்ந்துள்ள இப்புத்தாண்டை புதிய அரசாங் கம், "சுபீட்சத்தின் ஆண்டாக" ஆக் கும் திடவுறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்புடனேயே வரவேற் கின்றது என ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தெரிவித்தார்.

எமக்கே உரித்தான தொலை நோக்கினை கொண்டவொரு தேசமாக கடந்த காலத்தில் நாம் அடைந்த வெற்றிகள் ஏராளமா னவை. அத்தகைய எமது தனி த்துவ அடையாளங்களையும் திறன்களையும் நவீன தொழில்நுட் பத்துடன் ஒன்றிணைத்து வெளிப் படுத்துவதன் ஊடாக சுபீட்சத்தை அடையும் அபிலாஷையுடனேயே ஒரு அரசாங்கம் என்ற வகை யில் நாம் புத்தாண்டில் தடம் பதிக்கின்றோம்.

அத்தோடு தேசிய உணர்வுக ளுக்கு முன்னுரிமையளிக்கும் பலமானதொரு பொருளாதாரம் நாட்டுக்கு தேவையாகும். அதுவே சுயாதீனத்தை நோக்கிய எமது பயணத்தை மேலும் உறுதிப் படுத்தும்.

அதேபோன்று ஒழுக்கப் பண் பாடான சமூகத்தினால் பலப்படுத் தப்படும் பாதுகாப்பானதொரு தேசமே மக்களின் முதன்மை யான எதிர்பார்ப்பாகும் என்பதை யும் நான் அறிவேன். அத்தகை யதொரு சமூகத்திலேயே தற்கால மற்றும் எதிர்கால இளம் தலை முறையினரின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும். வளர்ந்த வர்கள் என்ற வகையில் நாமும், பிறந்துள்ள இப்புத்தாண்டில் அந்த இலக்கினை நோக்கிப் பயணிப் பதற்கு உறுதியுடன் கைகோர்த் துக் கொள்வோம்.

நாட்டை நேசிக்கும் மக்களின் ஐக்கியத்திற்கு கிடைத்த வெற் றியே இந்த புதிய அரசாங்கமா கும். மக்களின் எதிர்பார்ப்புகளு க்கு எதிரான எந்தவொரு சக்திக் கும் இந்த நாட்டில் நாம் இடம ளிக்கப்போவதில்லை.

அனைத்து மக்களும் ஒற்று மையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழக்கூடிய சிறந்த சூழலை நாட்டில் உருவாக்குவதே அதன் நோக்கமாகும்.

புத்தாண்டு பிறப்புடன் மக்க ளின் மனங்களில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியானது, புதியதோர் தேசத்தைக் கட்டியெழுப்பும் 'சுபீட் சத்தின் நோக்கு' செயற்றிட்டத்தை இலகுபடுத்தும் என்பது எனது உறுதியான நம்பிக்கையும் பிரா ர்த்தனையுமாகும்.

மலர்ந்துள்ள இந்தப் புத்தா ண்டு அனைத்து இலங்கையர்க ளுக்கும் எனதன்பிற்குரிய பிள் ளைகளுக்கும் வளமான எதிர் காலத்தை உறுதி செய்யும் ஆண் டாக அமைய எனது உளப்பூர் வமான நல்வாழ்த்துக்கள் என அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டது. (இ-7)

## மக்களை முட்டாள்களாக ராஜித நினைக்கிறார் கெஹலிய காட்டம்



(கண்டி)

நாட்டு மக்கள் அனைவரும் முட்டாள் கள் என்று கருதியே முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தனது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றாரென இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவி த்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக் கும் எந்தவொரு நிறுவனங்களுக்கும் தற்போதைய அரசாங்கத்தால் அச்சுறுத் தல்களோ அழுத்தங்களோ பிரயோகிக்கப் படுவதில்லை.

அந்தவகையில் அரசாங்கத்தின் மீது எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டாலும் நீதித்துறை சுயாதீனமாக தான் இயங்குகின்றது என்பதில் மாறுபட்ட கருத்துக்கும் இடமில்லை.

இதேவேளை குற்றங்களின் அடிப்ப டையில் கைது நடவடிக்கைகளை மேற் கொள்கின்றபோது அரசியல்வாதிகள் வைத்தியசாலைக்குள் ஓடி, ஒளியும் கலாசாரம் மாற வேண்டும்.

மேலும் ராஜித சேனாரட்ன மக்களை முட்டாள்களாக நினைத்துக்கொண்டு செயற்படுகின்றார்" என அவர் மேலும் தெரிவித்தார்.

ராஜித சேனாரட்ன கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பிணையில் விடுவிக் கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### திரு-தியாகரராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்.– கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரும்)

ஆருயிர் தந்தையே!
அன்புச் சிறைக்குள்
அகம் மகிழ்ந்த எங்களை
துன்பச் சிறை வைத்த
துயர நாள் இந்நாள்!
வஞ்சக் கரங்கள் செய்த
வன் செயலால் மிக
வருந்தி அழுத நாள் இந்நாள்!
உங்கள் கனவுகள் எல்லாம்
பிள்ளைகள் எங்களால்
நிறைவேறும் இந்நேரத்தில்
அன்புத் தந்தையே உங்களை
அகல விழி திறந்து தேடுகின்றோம்.
என்றாவதோர் நாள் காண்போம்
என்ற ஏக்கத்துடன்

**பிள்ளைகள்**

பவதாரணி (மகள்)
பிரணவன் (மகன்)
பவித்திரா (மகள்)

தகவல்:-
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06
தொலைபேசி :- 011 2360679

இல.276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2221877

## பரந்த கூட்டணியுடன் தேர்தலுக்கு முகம்கொடுத்து

# எமது எம்.பிக்களின் எண்ணிக்கையை தக்கவைத்துக் கொள்வதே இலக்கு!

### சஜித் எம்.பி.வெளிப்படுத்தல்

(அநுராதபுரம்)

**பரந்த கூட்டணியொன்றை அமைத்து எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முகம்கொடுக்கும் அதேவேளை, தற்போதுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தொடர்ந்தும் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்வதே பிரதான எதிர்பார்ப்பாகவுள்ளது. இயலுமாயின் அந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும். அதனை முன்னிறுத்தி நகர் வதற்கான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் அநுராதபுரத்திற்கு விஜயம் மேற்கொண்ட சஜித் பிரேமதாஸ, அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிலையில் தற்போது எமது தரப்பினர் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் நிலை தோன்றியிருக்கிறது. அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. பலர் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அரசியல் காரணங்களால் சிலருக்குப் பதவியுயர்வு வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று சிலர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது அன்னம் சின்னத்திற்கு ஆதரவாகவும், அர்ப்பணிப்புடனும் செயலாற்றிய மக்களைத் தொந்தரவிற்கு உள்ளாக்கும் செயற்பாடுகள் தற்போது அதிகாரத்திலிருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அவ்வாறு அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான அனைவரினதும் சார்பிலும் நாம் முன்னிற்பதுடன், அவர்களுக்கு ஆதரவாகவும் செயற்படுவோம். அது மாத்திரமன்றி அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு எமது அரசாங்கத்தில் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவழிக்கை எடுப்போம் என்று உறுதியளிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



செம்முகம் ஆற்றுகைக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 29, 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழ் நாட்டு பேராசிரியர் அ.ராமசாமியுடனான அரங்கு தொடர்பான கருத்துப்பகிர்வு மற்றும் களப்பயிற்சியின் போது...

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

### அர்த்தமே வேறுதான்

சில பேர் எப்படி என்றால்... அவர்கள் பேசுகிற வார் த்தை ஒரு மாதிரியாக இருக்கும்! அதற்கு அர்த்தம் வேறு மாதிரியாக இருக்கும். அதனாலே... நாம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது யோசித்துப் பார்க்க வேண்டும். இல்லை என்றால் விபரம் தெரிந்தவர்களைக் கேட்டு அதுக்கு அர்த்தம் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். கடைசிக் காலத்திலே அவர் அந்த மூன்று பிள்ளைகளையும் அருகிலே கூப்பிட்டு மூன்று அறிவுரைகளைச் சொல்லி விட்டு கண்ணை மூடினார்.

அவர் சொன்ன அறிவுரைகள் என்ன தெரியுமா? பெற்ற தாய்க்கு சோறு போடாதே... விதைத்த நிலத்துக்கு வேலி போடாதே! இது ஒரு அறிவுரை! கொடுத்த கடனைக் கேட்காதே! இது ஒரு அறிவுரை. என்ன இது... எல்லாம் ஒரே மாதிரியாக இருக் கிறது. அதையெல்லாம் பார்த்தால்... அறிவுரை மாதிரியாகவா தெரி கிறது. என் னப்பா இப்படி சொல்கி றியா என்று கேட்கலாம் என்றால் அதுக்குள்ளே கண்ணை மூடிவிட்டார். சரி ... அப்பா சொல்லிவிட்டு போன அறிவுரைக்கு அர்த்தம் என்ன? என்று கண்டு பிடிப்போம் என்று சொல்லி அந்த மூன்று பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு அறிவுரையை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார்கள் விபரம் தெரிந்தவர் களைக் கேட்கலாம் என்று.

ஒரு பெரியவர் வந்தார். அவரைப் பார்த்து விளக்கம் கேட்டா ர்கள். ஐயா... கொஞ்சம் நில்லுங்கள்.. எங்கள் அப்பா சாகிற சமயத்திலே.. பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்று சொல்லி விட்டுப் போனார். அப்படி என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டார்கள். அந்தப் பெரியவர் கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு விளக்கம் சொன்னார். பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்றால் பொதுவாக வயது போனவர்களுக்குக் கோபம் வரும். மருமகளோ மற்றவர் களோ சோறு போட்டால் சீராப்போட்டா... ஐயோ குறைத்து போடுகிறாளே! தாராளமாகப் போட மனசு வரவில்லை என்பார்கள். தாராளமாகப் போட்டால்...ஐயோ அப்படி மாட்டுக்குக் கொட்டுறது மாதிரி கொட்டுறாளே... என்பார் கள் ஆக எப்படிப் போட்டாலும் கோபம் வரும். அதனாலே இவர்களுக்கு எல்லாம் நாம சோறு போடக் கூடாது... அவர்களாக எடுத்துப் போட்டுக் கொள்வது மாதிரி அவர்க ளுக்கு முன்னாடி வைத்து விடவேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்... அதைத்தான் உங்கள் அப்பா பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்று சொல்லி யிருக்கிறார் என்று விளக்கம் கொடுத்தார் அந்தப் பெரியவர்.

சரி அடுத்தபடியாக எங்கள் அப்பா கொடுத்த கடனைக் கேட்காதே என்றாரே அது எப்படீங்க நாங்கள் கேட்காமலே திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கிற நல்லவர்களாகப் பார்த்துக் கடனைக் கொடுக்க வேண்டும். அதைத்தான் உங்கள் அப்பா கொடுத்த கடனைக் கேட்காதே என்று சொல்லியிருக்கிறார் என்றார். உடனே இவர்கள் அந்த மூன்றாவது விடயத்தையும் சொல்லி விளக்கம் கேட்டார் கள். விதைத்த நிலத்துக்கு வேலி போடாதே! என்று சொன்னாரே... அது எப்படி வேலி போடாமல் இருக்க முடியும் என்று கேட்டார்கள். ஏன் முடியாது? நம்ம நிலத்தைச் சுற்றியிருக்கிற நிலத்திற்குச் சொந் தக்காரர்களெ ல்லாம் நல்லவர்களாக இருந்தால் நம்ம நிலத்திற்கு வேலி போட வேண் டிய அவசியம் இல்லையே... வேறு பாதுகாப்பு தேவை இல் லையே.

அதனாலே நல்லவர்கள் நிலத்துக்கு மத்தியிலே நம்ம நிலம் இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் அதுக்கு அர்த்தம் என்றார் அந்தப் பெரியவர்.

அதன் பின்பு தான் இந்தப் பிள்ளைகளுக்கு அப்பா சொன்ன புத்திமதியினுடைய பொருள் புரிந்தது. ஒரு பெரியவர் இந்த உலகத்தை விட்டுப் போகக் கூடிய நிலை மையில் இருக்கிறார். கட்டிலிலே படுத்திருக்கிறார். சொந்தக் காரர்களையெல்லாம் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு புத்திமதி வீதமாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். அவர்களெல்லாம் அருகிலே வந்து அவர் சொல்கிற புத்திமதியெல்லாம் கேட்டுவிட்டுப் போகிறார்கள். கடைசியாக அவருடைய மனைவி அருகிலே வந்தார். எனக்கு என்ன புத்திமதி சொல்லிவிட்டுப் போறீர்கள் என்று கேட்டார். உனக்கு எதுவும் புத்திமதி சொல்ல வேண்டாம் என்று நினைக்கி றேன் என்றார்அவர். ஏன்? என்று கேட்டார் இவர். இதுவரை க்கும் நான் சொன்ன எந்தப் புத்திமதியை நீ ஒழுங்காகக் கேட்டிருக்கிறாய்? என்றார் அவர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 300 | 270 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 300 | 250 | 400 |
| தக்காளி | 100 | 180 | 180 | 90 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 100 | 80 |
| கோவா | 150 | 160 | 140 | 110 | 160 |
| கரட் | 350 | 350 | 400 | 200 | 450 |
| பூசணி | 80 | 80 | 60 | 70 | 80 |
| புடோல் | 150 | 180 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 160 | 120 | 150 | 130 |
| பாகற்காய் | 300 | 300 | 200 | 270 | 480 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 240 | 260 | 200 | 170 | 240 |
| லீக்ஸ் | 350 | 420 | 400 | 280 | 450 |
| பீற்றூட் | 260 | 300 | 240 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 400 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | 1800 | 800 | 600 | 800 |
| போஞ்சி | 150 | 280 | 240 | 210 | 240 |
| கத்தரிதம்புள்ள | 250 | 260 | 250 | 260 | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 90 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 60 | 100 | 50 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 350 | 380 | 40 | — | — |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 60 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 80 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 | 100 | 100 |

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# காத்தான்குடியில் கைதான 63 பேரில் இருவருக்குப் பிணை

(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கத்துடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட 63 பேரில் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 61 பேரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் சஹ்ரானின் தந்தையிடம் வாகனம் வழங்கியதாக கைதுசெய்யப்பட்ட இருவரே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நுவரெலியாவில் உள்ள தேசிய தௌஹீத் ஜமாத் தலைமையகத்தில் ஆயுத பயிற்சி பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட காத்தான்குடியை சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் கைதுசெய்யப்பட்டவர்களை ஆஜர்படுத்தியபோது பிணை வழங்கப்பட்டவர்களைத் தவிர ஏனையவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# தாமோதரம்பிள்ளையின் நினைவாலய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகா வித்தியாலயத்தில் சி.வை.தாமோதரம்பிள்ளையின் 120 ஆம் ஆண்டு நினைவாலய திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஏழாலை மகா வித்தியாலயத்தில் அதிபர் வே. உதயமோகன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் சி. மோகனச்செல்வன், யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள்பீட சைவ சித்தாந்தத்துறை விரிவுரையாளர் தி. செல்வ மனோகரன், கோப்பாய் கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# ராஜித வெளிநாட்டுக்கு சென்றால் மீண்டும் நாடு திரும்புவாரா என்பது சந்தேகமே!

## உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன, ஏதாவது ஒரு காரணத்திற்காக வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொண்டால், அவர் மீண்டும் நாடு திரும்புவாரா என்பது சந்தேகமே என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

"ராஜித சேனாரட்னவை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் அவர் மறைந்து இருந்த விதம் மற்றும் முன்பிணை பெற்றுக்கொள்ள முயற்சி செய்த விதம் என்பவற்றை கவனத்திற் கொள்ளும் போது அவர் சிங்கப்பூர் பயணித்தால் திரும்பி வருவார் என்று உறுதியாகக் கூற முடியாது.

மேலும் இதற்கு முன்னர் சுகாதார அமைச்சராக இருந்த அவர், தனக்கு அரசாங்க வைத்தியசாலைகள் மீது நம்பிக்கை இல்லாமல் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

அத்துடன் இலங்கையில் மருத்துவம் செய்ய முடியாதெனக் கூறி சிங்கப்பூருக்கு செல்வதாக அவர் தெரிவிப்பாராயின் இலங்கை வைத்தியத்துறை தொடர்பாக யாருக்கு நம்பிக்கை இருக்கும்" என அவர் வினவினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


## கம்சப்பிரியா இசைக்கல்லூரி

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(1673)

வடமா/க.ப/யாழ்/09

01.01.2020 அன்று காலை 8.30-10.00 மணி வரையான காலப் பகுதியால் எமது இசைக்கல்லூரியால், வீணை, வயலின், புல்லாங்குழல், ஹார்மோனியம், கிற்றார், ஓர்கன், வாய்ப்பாட்டு போன்ற இசைக் கருவிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.

ஆசிரியர்.

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-8770)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# புதுவருடத்தை முன்னிட்டு மன்னாரில் பலத்த பாதுகாப்பு





(மன்னார்)

இன்று பிறக்கும் புதுவருடத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்திலும் முப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர்.

கத்தோலிக்க மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் அதே நேரத்தில் நள்ளிரவு திருப்பலிகள் இடம்பெறும் ஆலயங்களிலும் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

முக்கிய அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் முழு நேர காவல் பணியில் ஈடுபட்டனர்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக இராணுவம் மற்றும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன. (இ-7-285)

# கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஆண்டுக்காக யாழ்.இந்துக் கல்லூரியின் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு கற்றல் நடவடிக்கைகள் 02.01.2020 வியாழக்கிழமை ஆரம்பமாகும். உயர்தர வகுப்புக்கள் 06.01. 2020 ஆரம்பமாகும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# டெங்கு நோயாளர்களுக்காக மட்டும் வைத்தியசாலைகள் அனைத்திலும் தனி வைத்தியரை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் பல பகுதிகளிலும் டெங்கு நோய் பரவி வருவதால் டெங்கு நோயாளர்களின் இரத்தப் பரிசோதனைக்காக இயந்திரம் வழங்குவதற்கும் அதற்காக தனி வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கும் சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது.

இதனையடுத்து, டெங்கு நோய்த் தாக்கம் அதிகளவில் காணப்படும் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு தற்பொழுது இவ்வாறான இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

நோயாளி டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளாரா? என்பதைக் கண்டறிவதற்காக நோயாளியின் முழுமையான இரத்தப் பரிசோதனை (Full Blood Count) மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலான வைத்தியசாலைகளில் இதற்கான வசதிகள் இல்லை.

இதனால் நோயாளர்களின் பாதுகாவலர்கள் வெளி இடங்களிலுள்ள இரசாயன கூடங்களில் பெருந்தொகை பணத்தைச் செலுத்தி இவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் அனைத்து பிரதான வைத்தியசாலைகளுக்கும் இந்த இயந்திரத்தை வழங்கவுள்ளது.

20 நிமிடத்தில் இதன்மூலம் பரிசோதனை தொடர்பான பெறுபேற்றை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கை வந்த ஐந்து அகதிகள் கைது



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குத் திரும்பிய அகதிகள் ஐந்து பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

கடந்த 26 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் படகு ஒன்று நங்கூரமிடப்பட்டிருந்ததாக கடற்படையினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்தே கடற்படையினர் குறித்த ஐந்து பேரையும் தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வைத்து கைதுசெய்தனர்.

இவ்வாறு நெடுந்தீவை வந்தடைந்த இலங்கை அகதிகளில் நான்கு பேர் தலை மன்னாரில் ஒரு வீட்டில் தலைமறைவாகியிருந்த நிலையிலேயே அவர்களை கடற்படையினர் கைது செய்த தோடு, யாழ்ப்பாணத்தில் தலைமறைவாகியிருந்த நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அத்தோடு கைது செய்யப்பட்ட நபர்கள் இங்கிரிய மற்றும் தலைமன்னார் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது. (இ-7)

# வடமாகாணத்தில் 120 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்தில் 120 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தற்போது கடமையாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்து மாகாணத்துக்குள் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்தது.**

வட மாகாணத்திலிருந்து தென் மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சேனநாயக்கவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மணல் கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், வாள்வெட்டு வன்முறை உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோருடன் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பு உண்டு என சட்டத்தரணி மு.றெமிடியஸ் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் அமைச்சரின் கட்சியைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையிலேயே தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக அறிய முடிகிறது.

வட மாகாணத்தில் ஒரே மாவட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி இந்த ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இந்த இடமாற்றத்திற்குள் உள்வாங்கப்பட்டனர்.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உரிய தரப்புக்களிடம் மேன்முறையீடு செய்தனர்.

மேலும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டனர். (இ-7)

# மர்மமான முறையில் யானையின் உடல் மீட்பு





(நெளுக்குளம்)

வவுனியா எல்லையோரத்தில் ஹொரவப்பொத்தான வீதி கலா புளியங்குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் உடல் ஒன்று நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படையினரின் முகாமிற்கு அண்மித்து வீதியோரத்தில் உயிரிழந்த யானையின் உடல் ஒன்றினை அவதானித்த பொதுமக்கள் கலா புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற விசேட அதிரடிப் படையினர் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் தெரிவித்திருந்ததுடன், யானை இறந்தமைக்கான காரணம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2-299)

# க.பொ.த.உயர்தர பெறுபேறு

**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

த.கிருஸ்ரிகா-3ஏ, ந.கோபிராம்-2ஏபி, ம.ரிசிகா-2ஏபி, ஜெ.ஜெனுசன்- ஏ2பி, க.விஜிதா-ஏ2பி, தி.மதீசன்-ஏபிசி, ப.குகதர்சினி-ஏபிசி, அ.நிறோஜன்-ஏபிசி, த.சங்கவி-3பி.

**வர்த்தகப்பிரிவு**

வி.தர்சன்-2ஏபி, அ.நவோமியா-2ஏபி, இ.குமாரதாஸ்-ஏ2பி, ர.நிலக்சிகா-ஏபிசி.

**கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் (தேசியப்பாடசாலை)**

**கலைப்பிரிவு**

ஜெ.தமிழ்நிலா-3ஏ, பி.வான்மதி-2ஏபி, எஸ்.விசிதா-2பிசி, பி.நிபிகா-2ஏசி, ஏ.நிரோகனா-ஏ2பி, எஸ்.தேவையா-ஏ2சி, எஸ்.சுமித்திரா-ஏ2சி,

**வர்த்தகப்பிரிவு**

**பழைய பாடத்திட்டம்**

ஆர்.அஜிதன்-2ஏசி.

**உயிரியல் பிரிவு**

நே.நிலுக்சன்-சி2எஸ், எஸ்.தவசியா-சி2எஸ், எஸ்.சுயலித்தா- சி2எஸ்.

**பழைய பாடத்திட்டம்**

கே.கொபிசாந்-பி2சி, ஏ.டென்சியா-2சிஎஸ், ரி.பவிதா-2சிஎஸ், ஆர்.விதியா-2சிஎஸ்.

**கணிதப்பிரிவு**

-வை.பிரசாந்தன்-பி2எஸ்.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**

ஆர்.மதுசாளின் 3பி, எஸ்.ஜீவன்-3பி.

**பொறியியல் தொழில் நுட்பப்பிரிவு**

வீ.கௌதமி-2பிசி, எஸ். துஸ்யந்தி-பி2சி, நே.தசப்பிரகாஸ்-பி2சி.

**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

தே.திலக்ஷன்-3ஏ, ச.டெங்கிஸ்ரன்ஸ் 3பி.

**கலைப்பிரிவு**

வ.ஜென்சி-2ஏபி, ர.றெபேக்கா-2ஏபி, சு.சிந்துஜன்-2ஏபி, யூ.அனஸ்ரினா-3பி, சி.சனுசிகா-2பிசி, து.கிருஷாந்-ஏசிஎஸ், வி.துஷ்யந்தன்-பி2சி, உ.திவ்வியா-பி2சி, சோ.கஜானா-பிசிஎஸ், சி.சஞ்ஜீவ்-3சி.

**யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை**

**கலைப்பிரிவு**

அ.பிரிசாந்தினி-ஏபிசி, நா.நிதுஜினி-பிசிஎஸ்.

**கிளி/பூநகரி மத்திய கல்லூரி**

**கலைப்பிரிவு**

ஆர்.கஜேந்திரன்-ஏ2பி, எல்.றெக்சன்-3பி, எம்.தமிழ்ச்செல்வன்-ஏபிசி.

**பழைய பாடத்திட்டம்**

ஆர்.மிதூசனா-ஏபிசி, ஏ.நிலோசி-ஏபிசி, ஜெ.விதுசனா-2ஏசி, சி.தர்மவதி-ஏசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

ச.சகிந்தா-2ஏபி,வெ. றொபினா-ஏபிசி.

**பழையபாடத்திட்டம்**

ப.லோசிகா-ஏ2பி.

**கணிதப்பிரிவு**

ஜெ.கிசான்-3பி.

**பழைய பாடத்திட்டம்**

வ.பார்த்தீபன்-2பிசி, வி.டிலக்சன்-பி2சி.

**உயிரியல்பிரிவு**

தி.சங்கவி-2சிஎஸ்.

**மு/பாலிநகர் மகா வித்தியாலயம்**

t hj j f gggwpT

சி.சிந்துஜா- 3ஏ, கு.கேதீபன்-ஏபிசி, து.முருகேசம்பிள்ளை 2பிசி

**கணிதப்பிரிவு**

வி.கீர்த்தனன்-ஏ2பி, யூ.மிதுர்ஷன்- 2சிஎஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

ம.நிலோஜன்-ஏ2சி, அ.அருட்சாயினி-சி2எஸ்.

**கலைப்பிரிவு**

வி.மேரிமதுசியா-பி2சி, தெ.டிலக்ஷனா-பி2சி, பூ.லோஜினி-பி2சி. (84-104)

# ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது



(நெளுக்குளம்)

ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை பேருந்தில் கடத்திச் சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற பேருந்தை நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் செட்டிகுளம் நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் சோதனைகளை மேற்கொண்ட போது ஒரு கிலோ ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்தனர்.

குறித்த சம்பவத்தில் முழங்காவில் பூநகரியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டதுடன் அவர் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னரே மத்திய கிழக்கு பகுதியில் இருந்து இலங்கை வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நடவடிக்கையில் செட்டிகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப்குமார மற்றும் பொலிஸார், செட்டிகுளம் காலாட்படை இராணுவம் (MIR) போன்றோர் முறியடிப்பினை மேற்கொண்டிருந்தனர்.

மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி ஒரு கோடி ரூபாய் என பொலிஸார் தெரிவித்ததுடன் கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக மேலும், தெரிவித்தனர். (ஜ-2-299)

# ஜனாதிபதியை சந்திக்க பட்டதாரிகள் தீர்மானம்

(நெளுக்குளம்)

ஜனாதிபதி கோட்டாபயவை சந்தித்து தமக்கான வேலை வாய்ப்பு தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா F.M.E ஊடகக்கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ந.வினோதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் வேலையற்ற பட்டதாரிகள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை சந்தித்து தமது வேலைவாய்ப்பு தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டது. (ஜ-2-299)

# ஆசிரியர் சித்திரவதை செய்து கொலை
# 29 பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மரண தண்டனை

## சூடான் நீதிமன்றம் தீர்ப்பு



(கார்டூம்)

சூடானில் பாதுகாப்புப் படையினர் 27 பேருக்கு மரண தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அகமது அல் காஹிர் என்ற பாடசாலை ஆசிரியர் கொலை தொடர்பாக பாதுகாப்புப்படையினர் 27 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கின் இறுதி விசாரணை நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் பாதுகாப்புப் படையினர் 27 பேர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டன.

இதனையடுத்தே அவர்கள் 27 பேருக்கும் மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மக்கள் அதிகம் சாப்பிடக்கூடிய ரொட்டி உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உச்சத்தை எட்டியது.

இது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியால், அந்த நாட்டில் 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்து வந்த உமர் அல் பஷீரை பதவி விலக வலியுறுத்தி போராட்டங்கள் மூண்டன. மக்களின் இந்தப் போராட்டத்தை அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது.

நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, சிறைகளில் துன்புறுத்தப்பட்டனர். அவ்வாறு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அகமது அல் காஹிர் என்ற பாடசாலை ஆசிரியர் கடந்த பெப்ரவரி மாதம் பாதுகாப்புப்படையினரால் கொல்லப்பட்டார்.

அவரது இறப்புப் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது. இதன் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் அந்நாட்டு இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

உமர் அல் பஷீர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அங்கு இடைக்கால இராணுவ சபை மற்றும் பொதுமக்கள் தரப்பிலான எதிர்க்கட்சி கூட்டணி ஆகிய 2 அமைப்புகளும் இணைந்து ஆட்சியை வழிநடத்தி வருகின்றன வென்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஆப்கானிஸ்தானில் போர் நிறுத்தம் தொடர்பான எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை

## தலிபான் அமைப்பு மறுப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் போர் நிறுத்தம் தொடர்பான எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை என தலிபான் அமைப்பு அறிவித்தது.

தற்போது ஆப்கானிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் நிரந்தரமான போர் நிறுத்தத்துக்கான சமரச ஒப்பந்தம் தயாராகியுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் தலிபான் அமைப்பினர் அறிக்கையொன்றினை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'போர் நிறுத்தம் தொடர்பாக சில ஊடகங்கள் அண்மைக்காலமாக பொய்யான தகவல்களைப் பரப்பி வருகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தம் எதிலும் தலிபான் அமைப்பு கையெழுத்திடவில்லை என்பதே உண்மை' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிராகக் கடந்த 18 ஆண்டுகளாக தலிபான்கள் போரிட்டு வருகின்றனர். அந்நாட்டு அரசுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் போரிட்டு வருகின்றன.

இந்நிலையில், தலிபான் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்டார்.

எனினும், ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகள் முழுவதுமாக திரும்பப் பெற்ற பிறகே அமைதிப் பேச்சுவார்த்தை தொடரும் என்வும், அமெரிக்காவுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஜனாதிபதி அஷ்ரப்கனி தலைமையிலான அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட மாட்டாது எனவும் தலிபான் அமைப்பு தெரிவித்து வருகிறது.

பேச்சுவார்த்தை ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் மற்றொரு பக்கம் தாக்குதல் நடவடிக்கைகளிலும் தலிபான் ஈடுபட்டு வந்தது. இதைக் குறிப்பிட்டு, தலிபான்களுடன் இனிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதில்லை என ட்ரம்ப் கடந்த செப்டெம்பர் மாதம் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# போன்களுடன் பொழுதைப் போக்காது குடும்பத்தினருடன் உரையாடுங்கள்

## போப்பாண்டவர் அறிவுரை



(வாடிகன்சிட்டி)

செல்போன்களை தூர வைத்துவிட்டு குடும்பத்துடன் அமர்ந்து உரையாடுங்கள் என்று செல்போன்களுக்கு அடிமையானவர்களுக்கு போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுரை வழங்கினார்.

உலகம் முழுவதும் 'ஸ்மார்ட் போன்' பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகப் பார்க்கப்பட்டு வந்த செல்போன் தற்போது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகிவிட்டது. அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்கு செல்போன் அவர்களின் ஆறாம் விரலாகவே மாறி விட்டது.

தூங்கும் நேரத்தை தவிர கிட்டத்தட்ட நாள் முழுவதும் செல்போனில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அப்படி செல்போன்களுக்கு அடிமையானவர்களுக்கு போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுரை வழங்கினார்.

உங்கள் செல்போன்களை தூர வைத்துவிட்டு குடும்பத்துடன் அமர்ந்து உரையாடுங்கள் என அவர் கூறினார்.

இயேசு கிறிஸ்து, மேரி, ஜோசப் ஆகியோரை மேற்கோள் காட்டி "அவர்கள் உரையாடினார்கள், உழைத்தார்கள், வழிபட்டார்கள்" அதையே நீங்களும் செய்யுங்கள் என போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், "நாம் குறைந்தபட்சம் உணவு மேசையில் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் போதாவது செல்போன்களில் மூழ்காமல் குடும்பத்துடன் உரையாட வேண்டும். பெற்றோரே, குழந்தைகளே, சகோதர, சகோதரிகளே இந்தப் புனிதமான பணியை இன்றே நாம் தொடங்குவோம்" என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக கேரள முதலமைச்சர் தீர்மானம்



(கேரளா)

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக கேரள சட்டசபையில், முதலமைச்சர் பினராயி விஜயன் தீர்மானம் கொண்டு வந்தார்.

தீர்மானத்தைக் கொண்டு வந்த முதலமைச்சா விஜயன் கருத்து வெளியிடும்போது, "குடியுரிமை சட்டம், மதச்சார்பின்மை மற்றும் நாட்டின் ஒற்றுமைக்கு எதிராக உள்ளது.

இது, குடியுரிமை வழங்குவதில் மத பாகுபாடு காட்டும் வகையில் உள்ளது.

அரசியலமைப்பின் அடிப்படை மதிப்பு மற்றும் கொள்கைகளுக்கு எதிராக உள்ளது.

நாட்டில் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதால், குடியுரிமை சட்டத்தை நிறுத்தி வைத்து, அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள மதச்சார்பின்மையை நிலை நிறுத்த வேண்டும். பல மாநிலங்களில் போராட்டம் நடைபெறுகிறது.

இது சர்வதேச அளவில், இந்தியாவின் மதிப்பை கெடுத்து விட்டது" எனக்கூறினார்.

சட்டசபை ஆரம்பித்ததும் பா.ஜ.கவின் ஒரே உறுப்பினரான ராஜகோபால் கூறுகையில்,

"குடியுரிமை சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதால், சட்டசபையில் தீர்மானம் கொண்டு வருவது சட்ட விரோதம். அரசியல் விரோதம் காரணமாக தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது" என தெரிவித்தார். (ஜ-2)

# 2020ஆம் ஆண்டு புத்தாண்டு பலன்கள்

## 01.01.2020 - 31.12.2020



ஆறாமிடத்தில் குரு, சனி, புதன், கேது, சூரியன் ஆகிய ஐந்து கிரகங்களும் கூடிய நிலையில் புத்தாண்டு பிறக்கிறது. எப்போதும் பொதுநலத்தில் ஈடுபாடு கொண்டு புகழ் குவிப்பவர்கள் நீங்கள். அந்த பொது வாழ்வில் வீழ்ச்சிகளும் வி.ஐ.பி.க்களின் எதிர்ப்புகளும் உங்களுக்கு எப்போதும் இருந்து கொண்டு தான் இருக்கும். அதிலும் இந்தப் புத்தாண்டில் எதிரிகளின் பலம் மேலோங்கும். இருப்பினும் குரு சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால், எதிர்ப்புகளை முறியடிக்க எளிதில் வழிபிறக்கும்.

ஆண்டின் தொடக்கத்திலேயே 6 ஆம் இடத்தில் 5 கிரகங்கள் இருக்கினைனயில் இருந்த பதவி உயர்வு ஏப்ரல் மாதத்திற்கு பிறகு கிடைக்கும். ஒருசிலர் சுதந்திரமாகச் செயற்பட முற்படுவர். ராகுவிற்குரிய துர்க்கை, காளி, மாரியம்மன், கேதுவிற்குரிய விநாயகர், சித்ரகுப்தர் போன்ற தெய்வங்களை எல்லாம் வருடத் தொடக்கத்திலேயே வழிபடுவதன் மூலம் எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசிக்குள் குரு வக்கிரம் பெறுகிறார். இக்காலத்தில் சனியும் தனுசு இராசிக்குள்ளேயே வக்கிரத்தில் இருக்கிறார். 6, 9 ஆகிய இடங்களுக்கு குரு அதிபதி என்பதால், தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பங்காளிப் பகை உருவாகலாம். அன்பு செலுத்தி வந்த அண்ணன், தம்பிகளில் ஒருசிலர் உங்களைவிட்டு விலக நேரிடும். அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் மட்டுமே ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். ஜென்ம குரு வக்கிரம் அடையும் பொழுது வாகன மாற்றங்கள், இடமாற்றங்கள் தானாகவே வந்து சேரும். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். சங்கிலித் தொடர்போல வந்த கடன்சுமை பாதிக்கு மேல் குறையும்.

பணியாளர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள்.

பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால், பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பள்ளியில் படிக்கும் பிள்ளைகளாக இருந்தால் அவர்கள் குணத்தில் மாறுபாடு ஏற்படலாம். அவ்வப்போது பார்த்து நெறிப்படுத்துங்கள். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பஞ்சாயத்துக்கள் உங்களுக்கு சாதமாக முடியும். பாகப் விரிவினையில் கிடைத்த இடத்தில் வீட்டைக்கட்டி அழகு பார்க்கும் யோகமும் உண்டு. பிள்ளைகளின் உத்தியோகம் சம்பந்தமாக முயற்சித்திருந்தால் அந்த முயற்சிக்குப் பலன் கிடைக்கும் நேரம் இது. 'பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியிருக்குமோ' என்ற சிந்தனையால் ஏற்பட்ட மனக்குழப்பம் நீங்கும். தட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிய குலதெய்வப் பிரார்த்தனைகளை மேற்கொள்ளுங்கள்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்!**

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் சனி பகவான் 29.04.

த்த பொறுப்புகள் சரிவர நடைபெறாது. மனநிம்மதி குறையலாம். இதுபோன்ற காலங்களில் வழிபாடுகள் தான் உங்களை வளப்படுத்தும். சனி பகவான் அருளும் சிறப்பு தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதோடு, அனுமனையும் வழிபாடு செய்து வாருங்கள்.

**செல்வ வளம் தரும் வழிபாடு**

திங்கட்கிழமை தோறும் விரதம் இருந்து தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவதோடு யோகம் பெற்ற நாளில் தஞ்சை பெரிய கோவில் சென்று நந்தீஸ்வரர், வராகி அம்மன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு அர்ச்சனைகள் செய்து வழிபட்டு வந்தால் சந்தோசத்தை தக்க வைத்துக்கொள்ளலாம்.

**குருவின் வக்ர காலமும் பரிவர்த்தனை யோகமும்**

27.3.2020இல் மகர இராசிக்கு, குரு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு 7.7.2020 வரை இருக்கிறார். இக்காலத்தில் தனுசு இராசிக்குள் சனியும் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், இருவரும் பரிவர்த்தனை யோகம் அடைகிறார்கள். 'பரிவர்த்தனை யோகம்'

## குருப்பெயர்ச்சிக்குப் பிறகு கூடுதல் நன்மை

றன. 8 ஆம் இடத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் சஞ்சரிக்கிறார். 12 ஆம் இடத்தில் ராகு, பலம் பெற்றிருக்கிறார். இத்தனைக்கும் மத்தியில் இந்த ஆண்டு பிறந்தாலும் குருவின் பார்வை 2, 10, 12 ஆகிய மூன்று இடங்களில் பதிகின்றது. பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய், தன்னுடைய சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். விருச்சிக - செவ்வாய் உங்களுக்கு விருத்தியம்சங்கள் பலவற்றையும் கொடுக்கும். இருப்பினும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகுதான் கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கூடுதல் நற்பலன்களும் கிடைக்கும். இதற்கிடையில் தசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு மட்டும் கெடுபலன்கள் கொஞ்சம் குறைவாக இருக்கும்.

**ஆறாமிடத்து குரு என்ன செய்யும்**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இரண்டு இடங்களுக்கும் அதிபதியானவர் குரு. அவர் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜயோக' அடிப்படையில் செயற்படுவார். அதன் பார்வை பலத்தாலும் பலன் கொடுப்பார். அவரோடு தனாதிபதி சூரியன், சகாய-விரய ஸ்தானாதிபதி புதன், சப்தம அஷ்டமாதிபதி சனி, கேது ஆகிய கிரகங்களும் இணைந்திருப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபட மாற்று மருத்துவம் கைகொடுக்கும். நீண்ட தூரப் பயணங்கள் நிகழ்காலத் தேவையைப் பூர்த்தி செய்யும். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாடு செல்ல வேண்டும் என்று விண்ணப்பித்தவர்களுக்கு, இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும். சக பணியாளர்களுடன் நல்லிணக்கம் ஏற்படும். உங்கள் திறமைக்கும் அங்கீகாரம் கிடைக்கும். ஒரு சிலருக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து மகிழ்விக்கும். கொடுக்கல்-வாங்கலில் இருந்த மனக்கசப்புகள் மாறும். பரிசீல

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

15.11.2020 இல் மகர இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிச் செல்கிறார். மகர இராசி குரு பகவானுக்கு நீச்ச வீடாகும். நீச்சம் பெற்றிருந்தாலும் குருவின் பார்வை நமக்கு உச்சம் பெற்ற வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். எனவே இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமான பெயர்ச்சியாகவே அமையப் போகிறது. சராசரி மனிதனைக் கூட சக்கரவர்த்தியாக்கும் ஆற்றல் குருவின் பார்வைக்கு உண்டு. எனவே இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தட்டுப்பாடுகள் அகன்று தனவரவு பெருகும். பட்டி தொட்டிகளில் எல்லாம் உங்கள் புகழ் பரவும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் 12 ஆம் இடமான விரயஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். 6 ஆம் இடமான எதிரிகள் ஸ்தானத்தில் கேது பகவான் சஞ்சரிக்கிறார். 1.9.2020 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கிறது. பின்னோக்கிச் செல்லும் இந்த இரண்டு கிரகங்களும் உங்கள் வாழ்வில் எண்ணற்ற நற்பலன்களை வழங்கப் போகின்றன. இந்த நேரத்தில் ரிஷபத்தில் ராகுவும், விருச்சிகத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்து சேரும். வியாபாரத்தில் இதுவரை இருந்த சரிவை சீரிக்கட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு வங்கிகளின் உதவி கிடைக்கும். வாடகை இடத்தில் நடைபெறும் தொழில் நிலையத்தைச் சொந்த இடத்திற்கு மாற்றுவது பற்றி சிந்திப்பீர்கள். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஒருசிலருக்கு வெளிநாட்டில் இருக்கும் சொத்துக்களை விற்று அதன் மூலம் பெரும்தொகை வரலாம். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும்.

2020 முதல் 14.9.2020 வரை தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசி அடிப்படையில் 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். களத்திர ஸ்தானம் மற்றும் ஆயுள் ஸ்தானத்திற்கு அதிபதியான அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். பிறரை விமர்சிப்பதால் நல்ல வாய்ப்புகள் கூட கைநழுவிச் செல்லலாம்.

13.2.2020 முதல் 22.3.2020 வரை தனுசு இராசிக்குள் செவ்வாய்-சனி சேர்க்கை நடக்கிறது. 3.5.2020 முதல் 17.6.2020 வரை கும்பத்தில் உள்ள செவ்வாயை சனி பார்க்கிறார். இந்த காலகட்டத்தில் மிகுந்த கவனம் தேவை. விரயங்கள் கூடுதலாக இருக்கும். கொடுத்த பணம் திரும்ப வராது. கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது.




26.12.2020 மகர இராசிக்குச் சனி செல்கிறார். சப்தம ஸ்தானத்தில் சனி இருக்கும்போது, 'கண்டகச் சனி' செயற்படும். இந்த காலகட்டத்தில் முன்னேற்றத்திற்கு இடையூறாக முன்கோபம் அதிகரிக்கும். எதிர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டாம். எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களை நம்பி எதுவும் செய்ய இயலாது. பிறரிடம் ஒப்படை

என்பது யோகங்களில் சிறந்த யோகமாகும். இக்காலத்தில் கல்யாணக் கனவுகள் நனவாகலாம். கடமையில் இருந்த தொய்வு அகலும். 'இல்லத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே' என்று கவலைப் பட்டவர்களுக்கு, சுபச் செய்திகள் வந்த வண்ணமாக இருக்கும். மன வலிமையோடு எடுத்த காரியத்தையும் எதிர்கொள்வீர்கள். மற்றவர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினை அகலும். 'வாரிசு இல்லையே' என்று ஏங்கியவர்களுக்கு, நீங்கள் செய்த வழிபாடுகளும் பரிகாரங்களும் நல்ல பலனை வழங்கப்போகின்றன.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டு மார்ச் மாதத்திற்கு பிறகு மகிழ்ச்சியும், முன்னேற்றமும் கொடுக்கும். வருடத் தொடக்கத்தில் புத-ஆதித்ய யோகமும், பலம்பெற்ற செவ்வாயும் இருப்பதால் பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். ஆபரண சேர்க்கை உண்டு. கணவன்- மனைவிக்குள், உடன் இருப்பவர்களால் சில பிரச்சினைகள் வரலாம். தொழில், உத்தியோகம் நிமித்தமாக கணவன் ஓரிடத்திலும் மனைவி ஓரிடத்திலும் வசிக்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், கல்யாண வாய்ப்புகளில் தடை ஏற்பட்டாலும் இறுதியில் நல்ல முடிவு ஏற்படும். தாய் மற்றும் சகோதரத்தின் ஒத்துழைப்பு திருப்தி தரும். குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் தொட்டது துலங்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றம், இனிய மாற்றமாக அமையும். வீடு, வாகனம் வாங்க கடனுதவி கிடைக்கும். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. பௌர்ணமி கிரிவலமும் குலதெய்வப் பிரார்த்தனையும் அனுமன் வழிபாடும் நல்ல பலன்களைக் கொடுக்கும்.

(தொடரும்)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் வாழ்வாதாரம் விரைவில் கட்டியெழுப்பப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி



(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அவர்கள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகளை ஆராய்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசி பரிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் மிக விரைவில் அக் குடும்பங்களின் வாழ்வாதார நிலையும் கட்டியெழுப்பப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளமூலங்கள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நூற்றுக்கும் மேற்பட்ட உறவினர்கள் சந்தித்து அவர்களது உணர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர்.

உறவினர்களின் வலிகளைக் கேட்டறிந்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்ற அழிவு யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலரின் நிலைமைகள் தொடர்பில் உண்மை நிலை கண்டறியப்படாதுள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அவர்களின் உறவினர்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த உறவினர்களின் கண்ணீருக்கும் அவர்களது கோரிக்கைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முண்டுகொடுத்து வந்த நல்லாட்சி அரசு எதுவித தீர்வுகளும் பெற்றுக்கொடுக்காது தமது சுயநல அரசியலுக்காக அவர்களது உணர்வுகளையும் போராட்டத்தையும் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

கடந்த 5 வருடங்களாக நல்லாட்சி அரசை தமது சுயநலன்களுக்காக தாங்கிப்பிடித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்பிரச்சினைக்கு இலகுவாக தீர்வுகளை கண்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் இந்தப் பிரச்சினையை தீராப்பிரச்சினையாக வைத்திருக்க வேண்டும் என்றே காலத்தை கடத்தி வந்திருந்தனர்.

ஆனால் நாம் உறவுகளை இழந்து தவிக்கும் உறவினர்களுக்கு உண்மைகளை கண்டறிந்து கொடுக்க வேண்டும் என்பதிலும் அதற்கான பரிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் கடந்த எமது ஆட்சியிலும் சரி அதன் பின்னர் வந்த நல்லாட்சியிலும் சரி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

காணாமல் போன உறவுகளின் உணர்வுகளை நானும் அனுபவித்தவன் என்ற ரீதியில் அவர்களுக்கான பரிகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உணர்வு எனக்கும் இருக்கின்றது.

அந்தவகையில் தான் நான் தற்போதைய அரசின் அமைச்சர் என்ற வகையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி வீதிகளில் போராடும் உறவினர்களை அழைத்து அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்ல உங்களின் ஒத்துழைப்பை கோருகின்றேன்.

அதற்கு நீங்கள் ஆதரவு தந்துள்ளதால் நிச்சயமாக வெகு விரைவில் உங்களது எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் பரிகாரங்களை பெற்றுக் கொடுக்க நான் ஏற்பாடுகளை செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 1ஆம் குறுக்கு வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

02.01.2020 தொடக்கம் நடைமுறைக்கு வரும்படி யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலைக்கு முன்பாக செல்லும் 1ஆம் குறுக்கு வீதி பாடசாலை நாட்களில் பாடசாலை நேரங்களில் ஒருவழிப்பாதையாக மாற்றப்படவுள்ளது என யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய வீதிகளில் வரும் வாகனங்கள் பாடசாலைக்கு முன்பாக உள்ள 1ஆம் குறுக்கு வீதியூடாக பயணிக்கலாம். பிரதான வீதியில் இருந்து வரும் வாகனங்கள், சேர்.வைத்தியலிங்கம் துரைச்சாமி வீதியூடாக பயணிக்கலாம்.

பாடசாலைக்கு முன்பாக 1ஆம் குறுக்கு வீதியில் பயணிக்க முடியாது.

பாடசாலை நாட்கள்:- காலை- 7.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை, மதியம் 1.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

## வாகன விபத்தில் சிக்கிய விமானப்படை வீரர்கள் நால்வர் உயிரிழப்பு!

(வரக்காப்பொல)

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் வரக்காப்பொல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு விமானப்படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர். ஆட்டோ ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது. இவ்வாறு உயிரிழந்தவர்கள் கஹட்டகஸ்திகிலிய, பலபன மற்றும் கொஸ்கம பகுதியைச் சேர்ந்த விமானப் படைவீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கிணற்றிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு



(மூதூர்)

திருகோணமலை- மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் பகுதியில் கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் கிளிவெட்டி, 58, பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த பா.கிஜோதன் (வயது-18) எனக் தெரிய வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலையிலிருந்து காணாமல் போயிருந்த நிலையில் இளைஞனை தேடும் நடவடிக்கையில் பெற்றோர்கள் ஈடுபட்டிருந்த வேளை அவரது வீட்டுக்கு வருகை தந்திருந்த அவரது மாமா தற்செயலாக வீட்டுக்கு முன்னால் உள்ள கிணற்றை பார்வையிட்டபோது சடலத்தை அவதானித்தார்.

இதனையடுத்து இளைஞனின் சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (இ-7)

## இரு சிறுமிகள் நீரில் மூழ்கிப் பலி!

(ஹாலிஎல)

நீராடச் சென்ற இருசிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் ஹாலி-எலயில் இடம்பெற்றது. ஹாலி - எல பிரதேசத்தில் பதுளை ஓயாவில் நீராடச் சென்ற இரு சிறுமிகளே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்த இரு சிறுமிகளும் 12 மற்றும் 16 வயதுடையுவர்களென பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)








ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்றிட்டத்தின் கீழ் நெல்லியடி நகரில் பிரதேச இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இணைந்து வரலாற்று ரீதியான விடயங்களை ஓவியங்களாக வரைந்து வருகின்றனர். (படங்கள்:- மகாலிங்கம்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிந்துவாரம் / நொச்சி / வெண்நொச்சி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name - Vittex negundo
Family - Verbinaceae
Engl - Indian Privet
Sinh - Nika

சிறிய மர அல்லது பெருஞ்செடி இனத்தைச் சேர்ந்தது. சிறிய தண்டுகளில் ரோம அமைப்புக்கள் காணப்படும். சிற்றிலைகள் 3 அல்லது 5 காணப்படும். இலைக்காம்பு 7.5-10 செ.மீ. நீளமானது. ஒழுங்கற்ற பூக்கள் இருபாலானவை, பிரகாசமான ஊதா சேர்ந்த நீல நிறமானவை. வருடம் பூராக பூக்களை அவதானிக்கலாம். வறட்சியான பிரதேசங்களில் பரம்பல் அதிகம்.

இதனுடைய இலைகள், பூக்கள்,வேர்,பட்டை அனைத்துமே மருத்துவ குணமிக்கவை. இது கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு சுவைகளைக் கொண்ட மூலிகையாகும்.

**நோயா கலியை நொடிக்**
**குளருந்த வெம்மை**
**யோயா மணாளு**
**முயர்த்துதலுக்- காய**
**வந்த முதல் நண்பாகி**
**வாதத்தை யேயுறவாற்**
**சிந்துவா ரங்கனலுந் தீ**

நொச்சி இனத்தில் மனை நொச்சி, கருநொச்சி, மலை நொச்சி, வெண்நொச்சி போன்ற சிற்றினங்கள் காணப்படுகின்றன.

இதில் நாம் வெண்நொச்சியின் மருத்துவப் பயன்களை ஆராயின்.

வெல்லம் சேர்த்துக் காய்ச்சிய நொச்சிக் குடிநீர் உடலின் வெம்மையை போக்கி, நாளுக்கு நாள் உடல் வன்மையைப் பெருக்கி வாத நோயை நீக்கி வளிக்குற்றத்தை தன்னிலையில் நிற்கச் செய்யும்.

நொச்சியிலைகளை நீர் விட்டு காய்ச்சி பிள்ளை பெற்றவர்கட்கு குளிப்பாட்ட உடல் வலி, இடுப்புவலி நீங்கும். என்புகள் பலப்படும்.

வெந்நீரில் இலையை



போட்டு வேகவைத்து நீராவி பிடிக்க வியர்வை உண்டாகி சுரம் தணியும். வளிக்குற்றத்தால் உண்டான உடல்வலி போகும்.

தலைவலி, தலைப்பாரம் அல்லது பீனிசம் முதலியவைகளுக்கு இதை தலையணையாக வழங்க குணமாகும். அல்லது இலையை சுக்குடன் சேர்த்தரைத்தும் கன்னம் பொறிகளில் பற்றிட தலைவலி தீரும்.

இலைச்சாற்றால் எண்ணெய் செய்து தலையில் தேய்த்து முழுகிவர தலைப்பாரம் நீங்கும்.

இலையை வதக்கி ஒற்றடமிட்டால் வீக்கம், கீல்வாயு தீரும்.

நொச்சி, பொடுதலை, நுணா ஈர்க்குகளை சேர்த்து குடிநீர் செய்து குழந்தைகளுக்கு ஏற்படும் மாற்றம் (செரியாமை) நோயிற்கு 5 மில்லி 10 மில்லி வரை கொடுக்கலாம்.

நொச்சி வேர்க்குடிநீர் 30-60 மில்லி காலை, மாலை எடுக்க வாதநோயை போக்கி, சிறுநீர்ப்பை அழற்சியையும் தீர்க்கும். மேலும் இதை வயிற்றுவலி, வயிற்றுப்புழு நோய்களுக்கும் கொடுக்கலாம்.

இதன் பூக்களை உலர்த்தி பொடித்து 1 கிராம் உடன் சிறிது பன்னீர், கற்கண்டு சேர்த்து கொடுக்க சளியுடன் இரத்தம் வரும் நிலை தீரும்.

நொச்சியிலைகளை நன்றாக பட்டுப்போல் அரைத்து 5 கிராம் அளவு தினமும் சாப்பிட்டு வர ஈரல் வீக்கம் படிப்படியாக குறையும்.

நொச்சியிலைச் சாற்றில் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி தலைக்கு தடவி குளித்து வந்தால் தலைவலி, கழுத்து வலி, பிடரி வலி தீரும்.

வெள்ளை நொச்சியிலையை கொதிக்கும் தண்ணீரில் போட்டு நீராவி பிடித்தால் வியர்வை அதிகம் வெளியேறி காய்ச்சல் தணியும்.

நொச்சி இலைச்சாறு ஒரு லீற்றர் எடுத்து நன்றாக கொதிக்க வைத்து நான்கில் ஒரு பங்கை சுண்டக்காய்ச்சி தினமும் 60 மில்லி அளவிற்கு குடிப்பதுடன் வலி உள்ள இடத்தில் தேய்த்தால் அனைத்து மூட்டுவலிகளும் விரைவில் தீரும்.

குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம் சம்பந்தமான நோய்கட்கு நொச்சியிலை, துளசியிலை,சீந்தில் தண்டு இலைகளில் ஒரு. கைப்பிடியாக எடுத்து பொடியாக நறுக்கி, ஒரு சுத்தமான மண்சட்டியில் போட்டு இரண்டு டம்ளர் (400 மில்லி) தண்ணீர்விட்டு 200 மில்லி அளவிற்கு சுண்டக்காய்ச்சி 10 மில்லி கொடுக்க மாந்தம் குணமாகும். வயிற்று உப்பிசமும் தீரும்.

கால், கையில் ஏற்படும் குடைச்சல் குணமாக நொச்சியிலையில் இரண்டு கைப்பிடியாகவும், தாழையிலையில் இரண்டு கைப்பிடியாகவும் எடுத்து ஒரு பானையில் போட்டு தேவையான அளவு தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க வைத்து அளவான சூட்டில் குளித்தால் கை, கால் குடைச்சல் குணமாகும்.

வாத சம்பந்தமான இடுப்பு, முழங்கால் வலிக்கு நொச்சியிலையை ஒரு கைப்பிடியளவு எடுத்து பொடியாக நறுக்கி 10 கிராம் வெள்ளை பூண்டையும் அதே எடை கஸ்தூரி மஞ்சளும் எடுத்து அம்மியில் ஒன்றிரண்டாக நைத்து பாத்திரத்தில் போட்டு 200 கிராம் வேப்பெண்ணெயை விட்டுக் காய்ச்சி பின் எண்ணெயை வலியுள்ள இடத்தில் தேய்க்க வாதவலி தீரும்.

முழங்காலில் ஏற்படும் வீக்கத்திற்கு நொச்சியிலையில் உள்ள நரம்புகளை நீக்கி விட்டு சட்டியை அடுப்பில் வைத்து ஒரு தேக்கரண்டி அளவு வேப்பெண்ணெய் விட்டு சூடேறி காய்ந்தவுடன் தேவையான நொச்சியிலை போட்டு வதக்கி வீக்கத்தின் மேல் வைத்து கட்ட வீக்கம் தணியும்.

பாரிசவாதத்தினால் கை, கால்கள் செயலிழந்து விட்டால் நொச்சியிலையை மை போல் அரைத்து பெரிய விளாம்பழமளவு எடுத்து பாத்திரத்தில் போட்டு 200 மில்லி ஆட்டுப்பால் அதிகம் விட்டு நன்றாக கலக்கி எட்டிக்கொட்டை 10 கிராம் எடுத்து சீவி பாலில் சேர்க்க வேண்டும்.

இதேபோல் சாம்பிராணித்தூளையும் சேர்த்து 3 கோழிமுட்டை மஞ்சட்கரு மாத்திரம் பாலில் சேர்த்து கரைத்து அடுப்பேற்றி 250 மில்லி வேப்பெண்ணெயும் சேர்த்து காய்ச்சி ஆறிய பின்பு வடிகட்டி இயங்க முடியாத கை, கால்களில் தடவி ஆமணக்கு இலைகளை வதக்கி அதன்மேல் வைத்து கட்டவும். தொடர்ந்து செய்து வர இரத்த ஓட்டம் சீராகி இயங்க ஆரம்பிக்கும்.





யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் அறிமுகப்படுத்தப்பட்ட நகரத்தை சுத்தப்படுத்தும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மேற்கு ஜே/110 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடந்த 28 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட சிரமதானம் மற்றும் பொது இடங்கள் கண்காணிப்பு நடவடிக்கையின் போது...

பழமைகள் தரும் கனி அனுபவம். அதுவே எதிர்கால விதைகளை எல்லாம் உருவாக்குகிறது.
– ஆர்னால்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 2020 ஆம் ஆண்டும் பிறந்தது இன்னும் நீவீர் துயிலுதியோ

இன்று மார்கழி திருவெம்பாவை ஆரம்பமாகிறது. இளம் பெண்கள் வைகறையில் துயில் எழுந்து நீராடி சிவப்பரம்பொருளை வழிபாடாற்றுவதற்கான ஏற்பாடே திருவெம்பாவை விரதமாகும்.

அதிகாலை எழுந்து நீராடி வீதி வழியே செல்கின்ற இளம்பெண்கள் தம் தோழியரின் உறக்கம் கலைக்கும் பொருட்டு ஏலோரெம்பாவாய் எனப் பாடிய வண்ணம் செல்லுவர்.

குளிர் நிறை மார்கழி மாதம் தெய்வ வழிபாட்டிற்குரிய மாதம் என்று கூறலாம். மார்கழித் திங்கள் பிறந்து விட்டால் வீட்டு வாசல்களில் கோலமிட்டு அலங்கரிக்கும் பண்பாடு நம்மிடையே உண்டு.

இது தவிர, மார்கழித் திருவெம்பாவை காலத்தில் இறைவனைப் பள்ளி எழுப்புகின்ற வழமையும் உளது.

எம்பெருமானாகிய சிவப்பரம்பொருளை அதிகாலையில் பள்ளி எழுப்பும் வகையில் "...எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே" என்று பாடிச் செல்லுகின்ற வழிபாட்டு மரபுகள் இறைவன் மீதான எங்களின் பக்தி வைராக்கியத்தையும் நம்பிக்கையையும் எடுத்தியம்புவனவாகும்.

இந்த நிகழ்வுகள் எதனையும் இப்போது நாம் காண முடியாது. முன்பெல்லாம் பெரியவர்கள், சிறுவர்கள் என அனைவரும் அதிகாலையில் எழுந்து சேமக்கலம், சங்கு முழங்க திருப்பள்ளியெழுச்சிப் பாடலைப் பாடுவர். மார்கழிக் குளிர் காலத்தில் வைகறைப் பொழுதில் எழுந்து தீவட்டிகள் ஏந்தி சங்கும் சேமக்கலமும் ஒலித்தவாறு அனைவரும் கூட்டாகப் பாடிச் செல்லுகின்ற அந்த அற்புத வழிபாடு ஊர்தோறும் தெய்வீகத்தை ஏற்படுத்தும்.

கூட்டுப் பிரார்த்தனையின் வலிமை உணரப்படும். வழிபாட்டு மரபுகளை நம் பெரியவர்கள் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற நடைமுறையும் இங்கு நடந்தாகிறது.

என்ன செய்வது இப்போது சங்கு, சேமக்கலம், திருப்பள்ளியெழுச்சி பாடுகின்ற நடைமுறைகள் எதுவும் இல்லாது போய், சில ஆலயங்களில் காலை பத்து மணிக்கும் திருவெம்பாவை பாடுகின்ற புதுமை நடந்தாகின்றது.

ஆக, திருவெம்பாவை விரதத்தின் உண்மையான பொருள் உணர்ந்து அதனை அனுஷ்டிக்க வேண்டும். இதற்கு முன்னேற்பாடாக பெரியவர்களும் சிறுவர்களுமாகச் சேர்ந்து திருப்பள்ளியெழுச்சி பாடிச் செல்லுகின்ற பழைய நடைமுறையை மீண்டும் ஊர்தோறும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

இதனை நிறைவேற்ற அறநெறிப் பாடசாலைகளும் சைவ சமய அமைப்புகளும் முன்வருவது அவசியம்.

இவ்வாறு திருவெம்பாவை காலத்தில் வீதியெங்கும் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுமாயின் அது எங்களின் இன எழுச்சிக்கும் வித்திடும்.

# ஆண்டு மலர்வில் மீண்டு எழுவோம்

## புத்தாண்டுச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

தலைநிமிர்வை தரும் உரிமை வாழ்விற்கான கனவுகளை வெல்ல தமிழ் தேசிய இனம் ஆண்டு மலர்வில் மீண்டு எழ வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில், வீழ்வோம் ஆயினும் மறுபடி எழுந்து உரிமையுடன் வாழ்வோம் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உறுதி மொழி!...

இந்த உறுதி மொழியை ஏற்று தமிழ்த் தேசிய இனத்தின் நெடுங்கனவை வென்றிட பிறக்கின்ற புத்தாண்டிலும் நாம் உழைப்போம் என உறுதி கொள்கிறோம்.

எமது மக்களின் நெடுங்கனவை நோக்கிய பயணத்தை வெல்ல முடியாதபடி ஏமாற்று வித்தை காட்டி எமது மக்களை ஆழ்ந்த மயக்கத்தில் வைத்திருந்த இருண்ட காலம் இன்று ஒழிந்து போனது. அரசியலுரிமை, அபிவிருத்தி, அன்றாட அவலங்களுக்கான தீர்வு நோக்கிய எமது இலட்சியப்பணிகளுக்கு குறுக்கே வீழ்ந்து கிடந்த தடைக்கற்கள் இன்று அகன்று போயின. தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை நோக்கிய கனவை ஒரு தோளிலும் அரசுடனான தேசிய நல்லிணக்க உறவுகளை மறு தோளிலும் சுமந்து நடக்கும் எம்மை நோக்கி இன்னமும் பலமாக மக்கள் இன்று அணி திரண்டு வருவதையிட்டு நான் அகமகிழ்ந்து வரவேற்கிறேன்.

தவறான பாதைகளை தெரிவு செய்து, மாய மான்களை பின் தொடர்ந்து ஓடியதால், கடந்து போன ஒவ்வொரு புத்தாண்டுகளும் தமக்கு புது மகிழ்வை தருவதற்கு மாறாக, தொடர்ந்தும் துயர் சூழ்ந்த வாழ்வையே தந்திருப்பதாக எமது மக்கள் தம் தவறை எண்ணி இன்று வருந்துகின்றனர்.

பிறந்திருக்கும் புத்தாண்டு எமது மக்களுக்கு புது நிமிர்வைத் தர வேண்டும். சூழ்ந்திருக்கும் துயர்கள் யாவும் தூர விலக வேண்டும்.

மக்களின் மகிழ்ச்சியும் மாற்றங்களும் ஒரு போதும் தாமாக நிகழ்வதில்லை. எமது மக்கள் சரியான திசை வழி நோக்கி விழித்தெழுதல் ஒன்று மட்டுமே மாற்றங்களுக்கு வழி சமைக்கும்.

ஆற்றலும் ஆளுமையும், மாற்றத்தை நோக்கிய விருப்பமும் மிக்க எமது வலிய கரங்களை பலப்படுத்துவதே பிறந்திருக்கும் புத்தாண்டை மகிழ்ச்சி தரும் ஆண்டாக மாற்றும். இலட்சிய தேரின் வடம் பிடித்து சேர்ந்திழுப்போம் வாருங்கள்! சகலருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவாக்கி அபிவிருத்தியை மேற்கொள்க

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுக விரிவாக்கம் மற்றும் புதிய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறைமுகங்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளிற்கு ஆலோசனை வழங்கினார்.

அதன் அடிப்படையில் இக்குறித்த அபிவிருத்தி செயற்பாட்டின் பொருட்டான செயன்முறை திட்டம் தீட்டல் செயற்பாட்டை மேற் கொள்வதற்காக துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளினால் ஆலோசனை சேவை நிறுவனத்திடம் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் புதிய முனையமொன்றை அமைக்கும் பொருட்டு கௌரவ அமைச்சரால் இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள முனையத்திற்கு 300, 400 தொன் நிறை கொண்ட கப்பல்களே வருகை தருகின்றன.

பெரும் கொள்ளளவைக் கொண்ட கப்பல்களை துறைமுகத்திற்குள் ஈர்க்கும் பொருட்டு புதிய முனையமொன்றை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஆலோச்சனை வழங்கினார்.

இப்புதிய முனையத்தின் ஆழம் 07 மீட்டர் ஆகும். இந் நடவடிக்கையூடாக துறைமுகத்தின் செயற்பாடுகளை அபிவிருத்திச் செய்ய, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பழைய முனையத்தை சீர்செய்தல், புதிய ஆழமான ஜெட்டியொன்றை நிர்மாணித்தல், அலைதாங்கியை விஸ்தரித்தல் ஆகிய துறைமுக அபிவிருத்தி செயற்பாடுகளை துரித கதியில் முன்னெடுக்குமாறு கௌரவ அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் விரிவாக்கல் செயற்பாடுகளின் பொருட்டு காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டின் முதலாம் கட்டமாக 15 ஏக்கர் காணியும், இரண்டாம் கட்டமாக 35 ஏக்கர் காணியும் கையகப்படுத்தப் படவுள்ளது. இவ்வனைத்து செயற்பாடுகளையும் துரித கதியில் முன்னெடுக்குமாறு அமைச்சர் மேலும் கூறினார்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் காணப்பட்ட கழிவுகளை அகற்றல் மற்றும் யுத்தத்தின் பொழுது மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களை அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் ஏனைய கழிவுகளை உடனடியாக அகற்றுமாறு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கினார். (ம-3)

## கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள நிதியின் மூலம் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வும் 100 மாணவர்களுக்கான ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் இன்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும். (ஜ)

## டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு

டெங்கு அபாயம்- நுளம்புகள் காலை 6-8 மணிக்குள்ளும் மாலையில் 4-6 மணிக்குள்ளும் வீட்டுக்குள் வரக்கூடிய வாய்ப்புள்ளதால் இந் நேரங்களில் ஜன்னல்கள், கதவுகளைப் பூட்டி வைப்பது மிகவும் சிறந்தது.

சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, வடக்கு மாகாணம்

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒரு காரியம் கஷ்டமாக இருப்பதால் நாம் பயப்படுவதில்லை. நாம் பயப்படுவதால் தான் அந்தக் காரியம் கஷ்டமாக இருக்கிறது.

-செனகா

## ஆன்மீகச் சிந்தனைகள்

### முருகனை வணங்குவோம்

❖ தமிழ் தெய்வமான முருகன் கருணை மிக்க ஆறுமுகங்களும், பன்னிரண்டு கரங்களும் கொண்டு அடியார்களுக்கு வாரிவழங்கும் வள்ளலாக விளங்குகிறான்.

❖ வெற்றி வேலை வணங்கியவர்களுக்கு தீவினை அகலும். இதையே, "வேலுண்டு வினையில்லை" என்னும் பழமொழியாக கூறினார்கள்.

❖ ஆறுமுகனை தாங்கும் பேறு பெற்றது மயில். முருகனின் திருவடிகளைச் சுமக்கும் மயிலை வணங்குபவர்களுக்கு பயம் நீங்கும்.

❖ உயிர்களை எமன் பாசக்கயிற்றால் கட்டி இழுப்பான். ஆனால், முருகனின் அடியார்களைக் கண்டால் அஞ்சுவான்.

❖ நம் இதயக்குகையில் முருகன் வீற்றிருக்கிறான். அதனால், அவனை "குகன்" என்று போற்றுவர்.

❖ முதலும், முடிவும் எனப்படும் ஆதி அந்தமில்லாதவன் முருகன். அவனுடைய திருவடிகளைச் சரணடைந்தவர்களுக்கு இப்பிறவியில் நல்வாழ்வும், இனி பிறவாத முக்தி இன்பமும் உண்டாகும்.

## கூறுவிலை கோரல்

2020ம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபாய் 20/- செலுத்தி சபையில் பெற்று 21.01.2020க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

(C-8789)

இல.12,கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

## மாணவர்கள் புதிய அனுமதி

### சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

**கோண்டாவில் – யாழ்ப்பாணம்**

2020 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.
எமது பாடசாலை நேரத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி :- சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்

### சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

**கனகபுரம் – கிளிநொச்சி**

2020 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.
எமது பாடசாலை நேரத்தில் அனுமதியை பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி :- சிவபூமி பாடசாலை, 1ம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி

**சிவபூமி அறக்கட்டளைக்கு நிர்வாக உத்தியோகத்தர் தேவை.**

ஆங்கிலம், கணனி அறிவுள்ளவர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரிக்கு 10.01.2020க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
சிவபூமி அறக்கட்டளை

(1683)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



அமரர்

### இராசரத்தினம் ஜெகதீஸ்வரன்

திதி :- 01.01.2020

தோற்றம் 21.11.1970 மறைவு 12.01.2019

மறைந்து போனாலும்
என்றும் மறந்து போகாத
அன்பைக் காட்டி சென்றவர்
எங்கள் அப்பா.
நீங்கள் மறைந்தது
உலகத்தை விட்டுத்தான்
எங்கள் உள்ளத்தில் அல்ல.

(C-8778)

கிளாலி
எழுதுமட்டுவாள்

குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய
புதுவருட நல்வாழ்த்துக்கள்

# S.V.MURUGESU

**Agents for - Anchor, Unilever, Litro Gas, Caltex Oil, Cavady, Serendib flours**




S.V. MURUGESU
IMPORTERS, GENERAL MERCHANTS
& CONSIGNMENT AGENT
NO. 154, HOSPITAL ROAD, JAFFNA.
svmmurugasugunaratnam@yahoo.com
TEL: 021-4925831 / 021-2228899
FAX: 021-2228899

2020
HAPPY NEW YEAR

S.V.M. (PVT) LTD.
NO. 122, DAM STREET, COLOMBO - 12.
TEL: 011-4378678
011-2424392
FAX: 011-2424391
svm-sugar@hotmail.com

(C-8794)

## வடக்கில் பௌத்த சின்னங்களை...

அவர் நேற்று வெளியிட்டுள்ள வாராந்த கேள்வி பதிலில் இதனை தெரிவித்துள்ளார்.

சென்ற ஜனாதிபதித் தேர்தல் ஒரு விடயத்தைப் "பளிச்" செனத் தெரியப்படுத்தியுள்ளது. நாடு கருத்துக்களின் அடிப்படையில் துருவ மயப் படுத்தப்பட்டுள்ளமை தெரிகின்றது.

சிங்கள மக்களின் சிந்தனைகள் வேறு தமிழ் மக்களின் கருத்துக்கள் வேறு என்பது புலப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதி அவர்கள் சிங்கள பௌத்தத்தை நிலைநிறுத்த முன்வந்துள்ளார். அதற்கு சிங்களப் பொதுமக்கள் பெருவாரியாக வாக்களித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் வட கிழக்கு மாகாணங்களில் பௌத்த கோயில்கள், விகாரைகள், சின்னங்கள் யாவும் விரைவில் நிமிர்ந்தெழ இருக்கின்றன.

சரித்திரம் தெரியாத விஞ்ஞான அறிவு படைத்த சிலர் "இது ஒரு பௌத்த நாடு" என்றும் "பௌத்தத்திற்கு முதலிடம் கொடுப்பதில் தமிழர்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் கூறியுள்ளார்கள். இது எந்த அளவுக்கு எம்மைப் பாதிக்கப் போகின்றதென்று அவர்கள் சிந்தித்தார்களோ தெரியாது. பௌத்த சின்னங்களை வடகிழக்கில் நிறுவ சுமார் 500 கோடி (சரியான தொகை எனக்கு நினைவில்லை) பாதீட்டில் ஒதுக்கிய போது எமது தமிழ்த் தலைவர்கள் அது பற்றித் தெரிந்தும் வாழாதிருந்தனர். காரணம் அவர்களுக்கு 300 கோடி தரப்போவதாக அப்போதைய பிரதம மந்திரி அறிவித்திருந்தார். இது தான் எமது பிரச்சினை. அரசாங்கங்களுடன் சேர்ந்து போங்கள், சேர்ந்து போங்கள் என்று பலர் எமக்கு அறிவுரை தருகின்றார்கள். சேர்ந்து போனால் அவர்கள் எம்மை வாங்கிவிடுவார்கள் என்பதை இவர்கள் உணர்வதில்லை. 300 கோடி கிடைக்கின்றதென்று அறிந்தவுடன் எம் தலைவர்கள் வாய்பேசா மடந்தையர் ஆகிவிட்டார்கள்.

தற்போது வடகிழக்கில் புத்த சமய சின்னங்கள் விரைவாக வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுக்க முடியாமல் இருக்கின்றார்கள் எங்கள் தமிழ்த் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3)

## வரிச்சலுகைகள்...

இதற்கமைவாக பொருளாதார சேவைகள் கட்டண வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கான நிறுவனங்களின் பற்று வரி பங்கு சந்தை வருமானத்தின் அடிப்படையில் அறவிடப்படும் மூலதன வரி, வருமாத்திற்கான வரி, சேவை வரி, சேமிப்பு வருமானம் மீதான வரி 28 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைக்கப்படுவதுடன், VAT From Apartment Buildings, தொலைத் தொடர்பு வரியும் 25 சதவீதமாக குறைக்கப்படுகிறது. (ம-3)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 838
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.31
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,184,885/-
வெற்றி இலக்கங்கள் 02 20 60 76 ஆங்கில எழுத்து K
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 0114 824 824, 0112 333 778 or 1919
தானியங்கி குரல் சேவையின் மூலம்: 0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சீட்டிழுப்பு வாரம்: 540
வர்ணம்: இளம்சிவப்பு
திகதி: 31/12 2019
செவ்வாய்க்கிழமை
A 11 24 45 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,702,920
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1634 சீட்டிழுப்பு திகதி 31/12/2019
வெற்றி இலக்கங்கள் 18 34 44 67 ஆங்கில எழுத்து W
அடுத்த வியாழக் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 43,644,928
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 31/12/2019 வெற்றி வாரம் 2724 வர்ணம் சிவப்பு
இடபம் வெற்றி இலக்கங்கள் 27 28 50 59
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,176,880
2020/01/01 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919


## சவேந்திர சில்...

டாபய ராஜபக்ஷ இந்த பதவியை நேற்று செவ்வாய்க்கிழமை அவருக்கு வழங்கினார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குறித்த பதவியில் இருந்து நேற்று விலகியதை அடுத்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## செயலாளரும்...

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்றுக் காலை முன்னிலையானதை அடுத்து, அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வெளிநாடு செல்வதற்கு, கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தடை விதித்திருந்தது.

வெள்ளைவான் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்புடன் தொடர்புடைய விசாரணைகளுக்கு அமைய, அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## வெட்டுக் காய...

தந்தையான முனியாண்டி விக்கினேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100,312)

## வடக்கிற்கு கடத்...

கடற்கரை பகுதிகளில் பொலிஸ் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் வடற்கிற்கு கடத்தப்பட இருந்த சுமார் 8 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சாவை பதுக்கி வைத்தவர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## சோற்றுப்பானை...

கடந்த 23 ஆம் திகதி நிலத்தில் மண்ணெண்ணெய் அடுப்பில் சோறு சமைத்துள்ளார். அப்போது அடுப்புக்கு அருகில் குழந்தையும் இருந்துள்ளது. இதன்போது குழந்தை எதிர்பாராத விதமாக அடுப்பினை காலால் உதைந்துள்ளது.

இதனால் அடுப்பில் கொதி நிலையில் இருந்த சோற்றுப் பானை குழந்தை மீது வீழ்ந்துள்ளது.

இதனால் குழந்தையின் உடம்பு முழுவதும் எரி காயம் ஏற்பட்ட நிலையில் காயமடைந்த குழந்தையை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளது.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## 2016இல் தமிழில் தேசியகீதம்...

பிவித்துரு ஹெல உறுமய தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தேசிய கீதம் எதுவென்பது பற்றி அரசியலமைப்பின் 7ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் தேசிய கீதம் 'சிறிலங்கா மாதா' என்றே காணப்படுகின்றது. இதனை போன்றல்லாமல் வேறொரு விதத்தில் தேசிய கீதம் பாடப்படுமாக இருந்தால் அது அரசியலமைப்பை மீறும் செயலாகும்.

இந்த சரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அது தொடர்பாகவும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய ஏதேனுமொரு விடயம் தொடர் பான சரத்தில் மாற்றத்தை ஏற் படுத்துவதாக இருந்தால் பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மாற்றங்களை ஏற்படுத்தலாம். (ம-3)

## வீதி புனரமைப்புக்கு சென்ற...

வீதி புனரமைப்பு வேலைகளுக்காக தார் பரல்களை ஏற்றி சென்ற உழவு இயந்திரம் தடம் புரண்டதில் அதில் பயணித்த எட்டு தொழிலாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பொன்னாலைச் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, காரைநகர் வீதி புனரமைப்பு பணிகளுக்காக 10 தார் பரல்களை ஏற்றியவாறு எட்டு தொழில்ாளர்கள் உழவு இயந்திரத்தில் பயணித்துள்ளனர்.

பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய வீதியில் இருந்து பொன்னாலை சந்தி வழியாக காரைநகர் வீதிக்கு உழவு இயந்திரத்தை திருப்ப முயன்றபோது, உழவு இயந்திரத்தில் இருந்து அதன் பெட்டி தனியாக கழன்று தடம் புரண்டது.

இந்த விபத்தின்போது, உழவியந்திரப் பெட்டி தலை கீழாகக் கவிழ்ந்தது.

அதில் பயணம் செய்தவர்களில் சிலர் தூக்கி வீசப்பட்ட நிலையில் சிலர் பெட்டிக்குள் அகப்பட்டுக் கொண்டனர்.

அவர்கள் தார்பரல்களுடன் சேர்ந்து வீழ்ந்தனர். பெட்டிக்குள் சிக்கியவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்டெடுக்கப்பட்டனர்.

படுகாயமடைந்த இருவர் உட்பட 6 பேர் உடனடியாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இருவர் காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டுசெலலப்பட்டவர்கள் பின்னர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

இந்த விபத்தில் பொன்னாலையைச்சேர்ந்தவர்களான மு.நாகமுத்து (வயது-65), பல்லசுட்டியைச் சேர்ந்த வ.வசிகரன் (வயது-34), ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர். அவர்களுடன் பயணித்த மா.ஸ்ரீவானந்தம் (வயது-45), நா.றஞ்சன் (வயது-41), வ.தினுஜன் (வயது-18), ரா.தபுசன் (வயது-21), வ.பசுங்கிளிராசா (வயது-63) மற்றும் எஸ்.துஜிபன் (வயது-20) ஆகியோர் சிறு காயமடைந்துள்ளனர்.

பசுங்கிளிராசா, துஜீபன் ஆகியோர் காரைநகர் பிரதேச வைத்தியசாலையிலும் ஏனையோர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## புலனாய்வாளர் என தெரிவித்து...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் முன்னாள் போராளிகள், போர்க்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தவர்கள் மற்றும் குற்றச் செயல்களில் குற்றம் சாட்டப்பட்டோரின் குடும்பங்களுக்கு புலனாய்வாளர்கள் எனக் கூறுவோரால் அலைபேசி ஊடாக கப்பம் கோரப்பட்டது.

பொலிஸ் புலனாய்வாளர்கள் பேசுகின்றோம் எனத் தெரிவிக்கும் அவர்கள், குடும்பத்தில் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைக் கைது செய்ய உத்தரவு கிடைத்துள்ளதாகவும் கைது செய்யாமல் விடுவதற்கு தாம் கூறும் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறு கோருகின்றனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த வாரம் இவ்வாறு மிரட்டல் விடுக்கப்பட்டதால், அவர் 75 ஆயிரம் ரூபாய் பணத்தை வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.

அதன்பின்னர் அழைப்பு எடுத்தவரின் அலைபேசி இலக்கம் துண்டிக்கப்பட்டதால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பணத்தை வைப்பிலிட்ட சிட்டையுடன் அச்சுறுத்தலுக்குள்ளானவர் முறைப்பாட்டை வழங்கியிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த காங்கேசன்துறை பொலிஸார், வங்கிக் கணக்கிலக்கத்துக்கு உரியவரை அளவெட்டிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கப்பம் கோரி அலைபேசி அழைப்பை எடுத்தவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் மறியலில் இருப்பவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, புலனாய்வாளர்கள் எனக் கூறி அலைபேசியில் கப்பம் கோரப்பட்டால் எந்தவொரு பயமுமின்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ம-3)


செவண
திகதி 31/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 249
ஆங்கில எழுத்து Q வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 27 50 58
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2019/12/31
சீட்டிழுப்பு இலக்கம் 4082
ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 1 8 0 5 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 31/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 2347
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 49 52 63 76
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/12/31
சீட்டிழுப்பு இலக்கம் 643
லக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 22 24 39 71
தேசிய லொத்தர் சபை

பௌதிகவியல்
T.K.KAJAN B.Sc
077 653 1177 (C-1642)

# அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்காது

## அரசாங்கம் அறிவிப்பு

இடைக்கால அரசாங்கத்தினால் அரச ஊழியர்களின் சம்பளத்தை தற்போது அதிகரிக்க இயலாது என தகவல் மற்றும் தொடர்பாடல் உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செயதியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

FALC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) DELF A1,A2,B1,B2
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் :20.01.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-8784)

NEC மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
வர்த்தகப் பிரிவு A/L DAY CLASS
கணக்கீடு K.பாலகஜன்
வணிகக்கல்வி SK.பாலசபேஷ்
பொருளியல் S.ஜெயக்குமார் V.ஜெகதீஸ்
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 7.00 மணி

கலை | வர்த்தகம் கணிதம் | உயிரியல்
NEC A/L 2022
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி | மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு காலை 9.00 மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

NEC A/L DAY CLASS
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
கலைப் பிரிவு
தமிழ் T.S.குகன் | அளவையியல் S.பவன் | இ.நாகரிகம் S.சுரேஸ் | அரசியல் G.ஸ்ரீரஞ்சித்
புவியியல் S.சபரிதன் | வரலாறு R.R.ஆனந்தன் | ஊடகவியல் M.கோனேஸ் | ICT T.தேவதர்ஷன்
கிறிஸ்தவம் K.சறோன் | நாட. அரங் I.பிரபா
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி

DCM - யாழ்.நகர் (N)
(யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
A/L Day
கலை, வர்த்தக பிரிவு
ஆரம்பம்:- 02.01.2020
கலைப்பிரிவு - காலை 7.00 மணி
வர்த்தகப் பிரிவு - மாலை 2.00 மணி
(1667) நிர்வாகி

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
A/L DAY CLASS
கலைப் பிரிவு
தமிழ் A.K. கீர்த்திராஜன் | இ.நாகரிகம் M. செல்வா | அளவையியல் P. கமல் / T. மோகன் | அரசியல் R. பாலகாந்தன்
புவியியல் S.P. கரன் | வரலாறு S.S. தாஸ் | நா.அரங்கியல் I. பிரபா | ஊடகவியல் M. கோனேஸ்
ICT T. தேவதர்ஷன் | கிறிஸ்தவம் K. சறோன்
ஆரம்பம்: 02.01.2020 வியாழன் காலை 9.00 மணி

வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கன்கராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை
(C-8600)

பண்டிகைக்கால விசேட சலுகை
JP Motors
உடன் இணைந்து கொண்டாடுங்கள்

41870/=
ரூபாயினைச் செலுத்தி
புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றினை ஓட்டிச் செல்லுங்கள்
◎ 5 வருட உத்தரவாதம்
◎ பழைய மோட்டார் சைக்கிளினைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினை பெற்றுக் கொள்ளலாம்.
Jaffna Road, Chankanai, Manipay.
TVS 077 715 1101, 077 129 0712
(C-8781)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8786)

KINGS ELECTRONICS (PVT) LTD
CHRISTMAS & NEW YEAR SPECIAL OFFERS
ELECTRONICS / FURNITURES / BABAY CARE / TOYS / LIGHTS
LIMITED SPECIAL OFFER
மாபெரும் மலிவு விற்பனை JANUARY 10 வரை
மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
10% - 40% OFF
SOFA 1+1+3 FULL SET RS.32,900

5 YEAR WARRANTY
LHD-677 LG RS.33,900

LED TELEVISIONS
3 YEAR WARRANTY
MEGA SEASON SALE LIMITED TIME OFFER


| | |
|---|---|
| Samsung 32" | -28900/= |
| Hisense 32" | -20900/= |
| Sony 32" | -29900/= |
| Video con 32" | -19900/= |
| Panasonic 32" | -22900/= |
| Maxmo 32" | -17990/= |
| Innovex 32" | -19250/= |
| Innovex 40" | -39900/= |
| Maxmo 40" | -39500/= |
| Hisense 50" | -91900/= |


LG Washing Machine RS.58,900

MX-L90 PARTY SPEAKER RS.23,400
LG-LHD457 RS.26,900

SINGER SWM-SAR6 RS.23,500
Hisense 55 4K SMART RS.129,900 ONLY
HITACHI 43" FULL HD RS.49,500 ONLY
SAMSUNG 43" 4K SMART RS.95,000 ONLY

SAMSUNG RT28K REFRIGERATOR RS.73,900 INVERTER
INVERTER LG REFRIGERATOR RS.69,900
REFRIGERATOR RS.40,900 SAMSUNG R19
ஞாயிற்றுக்கிழமையிலும் திறந்திருக்கும்
(C-8788)
076-3594665 KINGS JAFFNA 12,Point Petro Road,Jaffna

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.